உ

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ௵ ஆவணி ௴ 26 ஆம் உ (1889)
Web: w w w hinduorgan. com

பிரதி விலை ரூபா: 50.00
email: editor @ hinduorgan. com

நூலகம்

இந்து சாதனம்
(HINDU ORGAN)

புத்தகம்: 120

விரோதி வருடம் வைகாசித் திங்கள் 1 ஆம் நாள்
(15.05.2009)

இதழ்: 05

# கும்பழாவளைப் பிள்ளையார்

– சிவா. சரணன் –

கண்ணுக்கினிய வண்ணச்சோலைகள்; நீண்டு பரந்து நிழல் பரப்பும். குளிர் தருக்கள் ; தென்றல் தாலாட்டும் தீர்த்தக்கேணி ; கட்டடம், சிற்பம், ஓவியம் போன்ற கலைகளிற் சிறந்தவர்களின் கைவண்ணம் காட்டும் மண்டபம், மதில், இராஜகோபுரம், விமானம், சுவரோவியம் - இயற்கை எழிலும் செயற்கைப் புனைவும் இனிதாய்க் கலந்து இணைந்துள்ள அளவெட்டி கும்பழாவளைக் கோட்டத்திலே சுந்தரக் கோலத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார் சந்திரசேகரப் பிள்ளையார்.

மாருதப்புரவீகவல்லி என்றவுடன் மாவிட்டபுரத்தை மட்டும் நினைத்துக்கொண்டிருந்தவர்களை, தான் அருள் பாலித்துக்கொண்டிருக்கும் கும்பழாவளையையும் நினைக்கவும் அந்த நினைவுடன் தன்னைத்தேடி வரவும் செய்பவர் இந்தச் சந்திரசேகரப் பிள்ளையார்!

குதிரை முகத்தாலும் குஷ்டரோகத்தாலும் மனக் கவலைக்கு ஆளான சோழநாட்டிளவரசி மாருதப்புரவீக வல்லி தவசிரேஷ்டர் ஒருவரின் அருள்வாக்கு வழிகாட்ட யாழ்ப்பாணத்துக்கு வந்தாள் ; கீரிமலை நீரூற்றிலே நீராடினாள்; திருத்தம்பலேஸ்வரரையும் (நகுலேஸ்வரப் பெருமான்) கோயிற்கடவை முருகனையும் தினமும் வழிபட்டாள். குதிரைமுகம் நீங்கியது; குஷ்டரோகமும் குணமானது. திருத்தம்பலேஸ்வரரும் முருகப்பெருமானும்

→





கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் இராஜகோபுரமும் முகப்பு மண்டபமும் - சந்தனக் காப்புடன் சந்திரசேகரப்பிள்ளையார்

## கும்பழாவளைப் பிள்ளையார்

தனக்கு விடுத்த அருளாணையை, கோவிற் கடவைப் பூசகர் சடையனார் சமர்ப்பித்த வேண்டுகோள் அரண் செய்வதை உணர்ந்த சோழ இளவரசி, கோவிற்கடவை முருகனுக்குக் கோவிலொன்றைக் கட்டினாள். கோவில் அமைந்த இடம் மாவிட்டபுரம் (மா - குதிரை; விட்ட - நீங்கிய ; புரம் - கோவில்) என்ற காரணப்பெயருடன் முருகப் பெருமானின் திருவருட்கேந்திரமாக இன்றும் திகழ்கின்றது. கருணைக் கடலான அந்தக் கலியுக வரதனுக்கு மேலும் சில கோவில்களைக் கட்டி மகிழ்ந் தாள் இளவரசி.

மற்றவர்களின் பார்வையில் அவளுடைய **"மா"** முகம் மறைந்துவிட்டதென்பது உண்மைதான். ஆனால் அவளுக்கு...?

அந்தப் பழைய முகம் மாறவேயில்லையோ என்ற ஒரு சந்தேகம் சிறுபொறியாக உருவாகி, நாளடைவில் பெருந் தீயாக அவளுள்ளே கனன்றது. அதன் தாக்கத்தி லிருந்து விடுபடமுடியாமல் தவித்தாள் அவள்.

**"முருகனை முழுமனதுடன் வழிபட்டுக் கோவில் எழுப்பிய நீ, அவனுக்கு மூத்தவனை மறந்துவிட்டாயே! முதல் வழிபாட்டுக்குரிய முழு உரிமையும் பெற்றவனல்லவா அவன்?"**

விட்ட பிழையைச் சுட்டிக்காட்டினார் தவமுனிவர் ஒருவர்.

அறியாமற் செய்தாலும் பிழை, பிழைதானே!

செய்த பிழையை, சிறிதும் தாமதிக்காமல் சீர்செய் யத் தொடங்கினாள் சோழஇளவரசி. கொல்லங்கலட்டி, வரத்தலம், அளகொல்லை, கும்பழாவளை, பெருமாக் கடவை, ஆலங்குழாய், கல்வளை ஆகிய தலங்களிலே விநாயகரைப் பிரதிஷ்டை செய்து கழுவாய் தேடிக் கொண்டாள் ; கவலையிலிருந்தும் விடுபட்டாள்.

தன்னை வணங்குபவர்களின் விக்கினங்களைத் தீர்த்தும், வணங்க மறந்தவர்களுக்கு விக்கினங்களை ஏற்படுத்தி, அவர்களின் பிழையை உணரச்செய்து, பின் அந்த விக்கினங்களைத் தீர்த்தும் அவர்களைத் தன் அடியவர்களாக்கியும் **"விக்னேஸ்வரன்"** என்ற தன் திரு நாமத்தின் கருத்தை மீண்டும் வெளிப்படுத்தினார் விநா யகப்பெருமான்! முப்புரம் எரிசெய்த அச்சிவனுறை ரதம் அச்சது பொடிசெய்த அதிதீரனல்லவா அவன்?

பிள்ளையார் கோவில்கள் ஏழினுள் நடுநாயகமாகத் திகழும் கும்பழாவளை ஏற்கெனவே ஒரு வழிபாட்டுத் தலமாக இருந்திருக்கின்றது.

மாடு மேய்க்கும் ஒருவர், ஒருநாள், தன் மாடுகளை மேயவிட்டுவிட்டு, மரநிழலின் கீழ் படுத்துத் தூங்கிவிட்டார். நீண்டநேரத்தின் பின்னர் தூக்கம் கலைந்து எழுந்தபோது, மாடுகள் ஒன்றையும் காணவில்லை. எதிரே இருந்த மண்மேடு ஒன்றிலே எருக்கலஞ் செடிகளுக்கு மத்தியிலே ஒளிப்பிளம்பு ஒன்று தெரிந்தது ; பக்கத்திலே பெரிய கல் ஒன்றும் இருந்தது. முன்னர் ஒருபோதும் தான் கண்டிராத இந்தக் காட்சியைப் பற்றி, அவர் ஊர்மக்களுக்குச் சொன்னார். அந்த அதிசயக் காட்சியைச்சென்று பார்த்த வர்களுட் சிலர், அந்தக் கல்லைச் சிவனாகக் கருதி வழிபட்டார்கள். ; சிலர் அம்பாளாகவும் வேறு சிலர் வைர வராகவும் கருதி வழிபட்டார்கள். ஆனால் தூய்மையான பக்தி நிறைந்த ஒரு பெண்மணியின் கனவிலே காட்சி யளித்த இறைவன், **"அந்த மண்மேட்டிலே நானே இருக்கின்றேன். என்னைப் பிள்ளையார் என்றே வழி படுங்கள்"** எனச்சொல்லி மறைந்தார்.

பிள்ளையார் வழிபாடு ஆரம்பமாயிற்று. பெண்ணின் கனவிலே காட்சியளித்த பிள்ளையார் ஒரு கொம்புடன் இருந்தபடியால் அந்த இடம் கொம்பனார்வளை என்றும் காலப்போக்கில் அப்பெயர் மருவி கும்பழாவளை ஆனது என்றும் சிலர் கருதுகின்றனர். மாடுகள் அந்த இடத்திலே கும்பலாக மேயும் வழக்கத்தைக் கொண்டிருந்தமையால் **"கும்பல் ஆ வளை"** என்பதே கும்பழாவளை ஆனதாகச் சிலர் கூறுவர்.

விநாயகரைப் பிரதிஷ்டை செய்வதற்காகக் கும்பழா வளைக்கு வருகைதந்த மாருதப்புரவீகவல்லி, கோவி லுக்கு முன்னால் இருந்த மண்மேடொன்றிலே கால் வைத்தவுடன், குதிரை முகம் சம்பந்தமான சந்தேகம் முற்றாக நீங்கியதை உணர்ந்து கொண்டார். அந்தத் தெய்வீக அநுபவத்தை ஏற்படுத்திய இடம் மாவிழிதிட்டி (மா இழி திட்டி) என்றே இன்றும் அழைக்கப்படுகின்றது.

இன்று நேற்றல்ல, இற்றைக்குப் பல நூற்றாண்டு களுக்கு முன்னரே விநாயகப்பெருமானின் அருளாட்சியில் கும்பழாவளைத் திருத்தலம் மாட்சியுடன் திகழ்ந்ததற்கு இவை சான்றாக இருக்கின்றன.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் இடித் தழிக்கப்பட்ட சைவ ஆலயங்களுட் கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலும் ஒன்று. எனினும் மூலஸ்தான விக்கிரகம், மரவேலை செய்யும் கணபதி என்பவரால் மரப்பொந்தொன்றில் வைத்துப் பூசிக்கப்பட்டதென்று சொல்லப்படுகின்றது. கணபதியைக் கணபதிதான் காப் பாற்றியிருக்கின்றார்!

இப்போதைய ஆலயத்தின் ஆரம்பம் 1811 ஆம் ஆண்டு என்பதற்கு ஆவணச் சான்றுகளுண்டு. விநாய கரின் அடியார்கள் பலர் தாமாக முன்வந்து திருப்பணிகள் →

## கும்பழாவளைப் பிள்ளையார்

பல செய்தனர். 1948 ஆம் ஆண்டின் நீதிமன்ற ஆணையின்படி அடியவர்களால் ஐந்து ஆண்டுக்கு ஒரு தடவை தெரிவுசெய்யப்பெறும் ஏழு பேர்கொண்ட அறங்காவலர் சபை, ஆலயத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருக்கின்றது. நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டதற்கிணங்க, சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்களின் பரம்பரையினரே ஆலயத்தின் நித்திய, நைமித்திக, விசேட, கிரியைகளை ஆற்றி வருகின்றனர். ஆலயத்தொண்டர் சபையினர் அறங்காவலர் சபையினருடன் இணைந்து செயற்படுகின்றனர்.

மூதறிஞர் பண்டிதர் க. நாகலிங்கம் அவர்களின் தலைமையில் உருவாக்கப்பெற்ற திருப்பணிச்சபையினர் பெரும் பொருட்செலவில் நிறைவேற்றிய திருப்பணிகளால் ஆலயம் இப்போது புதுப்பொலிவுடன் மிளிர்கின்றது. 2002 ஆம் ஆண்டில் அமரர் சிவஸ்ரீ இ. சோமசுந்தரேஸ்வரக் குருக்கள் தலைமையில் புனராவர்த்தன நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அவருடைய புத்திரரான சிவஸ்ரீ சோ. குமாரதாசக் குருக்கள் பிரதம சிவாச்சாரியராக இப்போது பணியாற்றி வருகின்றார்.

முன்னர் குறிப்பிட்டதைப்போல், ஆலயத்தின் மூல மூர்த்தியாக அருள்பாலித்துக்கொண்டிருப்பவர் சந்திர சேகரப் பிள்ளையார். அர்த்த மண்டபத்தில் வலப் பக்கத்திலே சுந்தரேஸ்வரப்பெருமானும், இடப்பக்கத்திலே மீனாட்சி அம்பாளும் வீற்றிருப்பது விசேடமாகக் குறிப்பிடப்படவேண்டும். பஞ்சமுக விநாயகர், நடராஜப் பெருமான், நால்வர், சண்டேஸ்வரர் ஆகியோருக்குத் தனிச் சந்நிதிகள் உண்டு. பலவித சிற்ப சித்திர வேலைப்பாடுகளுடன் கலாமண்டபமாகக் காட்சியளிக்கின்றது வசந்த மண்டபம். சிவன், அம்பாள், விநாயகர், வள்ளி தேவசேனாவுடன் கூடிய சுப்பிரமணியர் – உற்சவ மூர்த்திகளை அங்கே தரிசிக்கலாம். குமாரத்தி தீர்த்தத் தடாகமும் மாருதப்புரவீகவல்லியின் தொடர்பை நினைவூட்டுகின்றது.

ஆகம முறைப்படி தினமும் நான்கு காலப்பூசைகள் நடைபெறுகின்றன. வைகாசிப் பூரணையை தீர்த்தத் தினமாகக் கொண்டு ஆண்டுதோறும் பிரம்மோற்சவம் என்ற பெருந்திருவிழாக்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதப்பிறப்பன்றும் சங்கிராந்தி தீர்த்தமும் மாதத்தில் வரும் இரண்டு சதுர்த்தியில் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. தைப்பூசம், சிவராத்திரி, நவராத்திரி, கந்தசட்டி, பிள்ளையார்கதை, திருவெம்பாவை முதலியவை ஏனைய விசேட நிகழ்ச்சிகளாகும். ஆடல்வல்லானுக்குரிய ஆறு அபிஷேகங்கள் நடைபெறுவதும் விசேட குறிப்பிற்குரியது. உரிய காலங்களில் பெரிய புராணபடனம், கந்தபுராணபடனம், திருவாதவூரடிகள் புராணபடனம், பிள்ளையார் கதைப்படிப்பு ஆகியவை இடம்பெறுகின்றன.

அதோ

**மாவையூர் முருகனின் வரம்பெறு வனிதையாம்**
**மாருத வல்லியின் மாமுக நோய்தனை**
**மாவிழி திட்டிமுன் வந்துநின் றகற்றி**
**மாலுமை சிவன் குகன் வைரவர் சூழ்தர**
**ஓவியக் கோயிலில் காவியக் கருவாய்**
**உறைந்திடும் கும்பழா வளைக்கண பதியே**
**தேவிவல் லபைக்கொடு நாயக னாகிய**
**சிற்பரனே பள்ளி எழுந்தருளாயே!**

என்ற திருப்பள்ளி எழுச்சிப்பாடல் தேனாய் வந்து காதில் இனிக்கின்றது.

வாருங்கள், கும்பழாவளை அருள் குஞ்சரக் கன்றைக் கும்பிட்டு உய்வோம் ; உயர்வோம்! ❋

## அன்னதானம்

**அன்னதானத்துக்கு என்ன விசேடம் என்றால், இதிலே தான் ஒருத்தரைப் பூரணமாகத் திருப்திப்படுத்த முடியும். பணம், காசு, உடை, நகை, பூமி, வீடு இந்த மாதிரியானவற்றை எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறவன் அதற்கு மேல் தந்தாலும் 'வேண்டாம்' என்று சொல்லமாட்டான் . அன்னம் போடுகிற போதுதான் ஒருத்தன் என்னதான் முட்ட முட்டச் சாப்பிட்டாலும் ஓர் அளவுக்கு மேல் சாப்பிட முடியாது.**

**– கண்ணதாசன் –**

## இந்துமதம்

**இதயம் பரிசுத்தமாகவும், வார்த்தைகள் உண்மையாகவும் உள்ள ஒருவரைக் கண்டால். அவன் காலில் விழுந்துவிட நான் தயார். கள்ளம் கபடம் அற்ற வெள்ளை உள்ளங்களையே மதம் வளர்க்கிறது. மனிதனைத் தெய்வமாக்க இந்துமதம் விரும்புகிறது. ஆனால் மனிதனை மனிதனாக்கும் முயற்சியிலேயே இன்னும் அது வெற்றி பெறவில்லை.**

**– கண்ணதாசன் –**

# சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவோம்.

**திருஞானசம்பந்தர் முதன் முதலில் திருப்பிரமபுரத்திற் பாடிய 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தின் ஐந்தாம், ஆறாம் பாசுரங்களின் பதவுரை, பொழிப்புரை ஆகியவற்றைத் தருகின்றோம்.**

## திருஞானசம்பந்தர் திருப்பதிகம்

*தலம்: திருப்பிரமபுரம்* *பண்: நட்டபாடை*

**திருச்சிற்றம்பலம்**

**சடைமுயங்கு புனலன் அனலன் எரி வீசிச் சதிர்வெய்த**
**உடைமுயங்கும் அரவோடுழி தந்தென துள்ளங் கவர் கள்வன்**
**கடல்முயங்கு கழி சூழ்குளிர் கானலம் பொன்னஞ் சிறகன்னம்**
**பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மான் இவனன்றே.**

**சடைமுயங்கு** - சடையிற் றங்கிய, **புனலன்** - கங்கையை உடையவனும், **அனலன்** - (கையினில்) அக்கினியையுடையவனும், **எரி வீசி** - நெருப்பினைச் சிந்தி, **சதிர்வு எய்த** - அழகு பொருந்தும்படி, **உடைமுயங்கும்** - ஆடையின் மேற்பொருந்திய, **அரவோடு** - பாம்புக் கச்சோடு, **உழிதந்து** - திரிந்து வந்து, **எனதுள்ளம் கவர் கள்வன்** - என்னைத் தன்வயப்படுத்திக் கொண்டவன், **கடல் முயங்கு** - கடலோடு கலக்கின்ற, **கழிசூழ்** - உவர்நீர்ப் பரப்புச் சூழ்ந்த, **குளிர்** - குளிர்ச்சியையுடைய **கானல்** - சோலையினிடத்து, **அம்** - அழகிய, **பொன் சிறகு அன்னம்** - பொன்னிறச் சிறகுகளையுடைய அன்னச் சேவல்கள், **பெடை** - அன்னப் பெடைகளை, **முயங்கு** - கலக்கின்ற, **பிரமாபுரமேவிய** - சீகாழியின் கண் எழுந் தருளியுள்ள, **பெம்மான் இவன்** - பெருமானாகிய இவனே.

**பொழிப்புரை:** சடையிற் கங்கையையும், கையில் அக்கினியையும் கொண்டு, உடை நெகிழாதபடி பாம்புக் கச்சையை அணிந்து வந்து, என்னைத் தன்வயப்படுத் திக் கொண்டவன், கடலோடு கலக்கின்ற உவர்நீர்ப் பரப்பாற் சூழப்பெற்ற, அன்னச் சேவல்கள் தம் பெடையுடன் கூடி மகிழ்கின்ற குளிர்ந்த சோலைகள் நிறைந்த சீகாழியில் எழுந்தருளியுள்ள இறைவனே.

**வியரிலங்குவரை உந்திய தோள்களை வீரம் விளைவித்த**
**உயிரிலங்கை அரை யன்வலி செற்றென துள்ளங்கவர்கள்வன்**
**துயரிலங்கும் உல கிற்பல ஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம்**
**பெயரிலங்கு பிரமாபுரமேவிய பெம்மான் இவனன்றே**

**வியர்இலங்கு** - வியர்வை பொருந்திய, **வரை உந்திய** - திருக்கைலாய மலையை எடுத்த, **தோள்களை** - தோள்களால், **வீரம் விளைவித்த** - வீரத்தை ஏற்படுத்திய, **உயர் இலங்கை அரையன்** - மதில்கள் உயர்ந்த இலங்கை அரசனான இராவணனது, **வலிசெற்று** - வலியைக் கெடுத்து, **எனதுள்ளங் கவர் கள்வன்** - என்னைத் தன்வயப் படுத்திக் கொண்டவன், **துயர் இலங்கும்**- துன்பம் பொருந்திய, **உலகில்** - இவ் வுலகில், **பல ஊழிகள்** - பல கற்பங்கள் (ஊழிக் காலங்கள்), **தோன்றும் பொழுதெல்லாம்** - உண்டாகும் போதெல்லாம், **பெயர் இலங்கு** - தன் பெயர் கெடாது தானும் நிலைபெற்று, விளங்குகின்ற, **பிரமாபுரமேவிய** - சீகாழியின் கண் எழுந்தருளியுள்ள, **பெம்மான் இவன்** - பெருமானாகிய இவனே.

**பொழிப்புரை:** திருக்கைலாய மலையைத் தூக்கிய இலங்கை மன்னன் இராவணனின் வலிமையை அழித்த வனும், துன்பங்கள் நிறைந்த இந்த உலகிலே ஊழிப் பேரழிவு நிகழும்போதெல்லாம், தான் அழியாமல் நிலைத்து நிற்கின்ற, இந்தத் திருப்பிரமபுரத்தில் எழுந் தருளியுள்ளவனுமாகிய சிவபெருமானே என்னைத் தன் வயப்படுத்திக் கொண்டவன். ❋

## திருச்சிற்றம்பலம்

**திருமுறை இறைவனின் மந்திர ரூபமாதலால் புனித மான ஓரிடத்தில் வைத்துப் பக்குவமாய்ப் பேணுதல் வேண் டும். சைவ ஆசாரம் பொலியும் புறக்கோலத்துடன் உள்ள மும் தூயராய்த் தொழுது திருமுறையைக் கையிலேந் துதலே முறையாகும். திருமுறைப் பாராயணத்துக்கு முன் னர் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் உட்கார்ந்து விநாயகரைத் தியானித்து சிவபெருமானை யும் உமா பிராட்டியாரையும் சமய பரமாசாரிய சுவாமிகள் நால்வரையும் திருத்தொண்டர் சீர்பரவுவாராகிய சேக்கி ழார் நாயனாரையும் சிந்தித்து ஒவ்வொரு திருப்பாட்டின் முதலிலும் முடிவிலும் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லுக.**

**– சுவாமிநாத பண்டிதர் –**

**திருச்சிற்றம்பலம் என்பது உலகத்தில் வெளிப்புறத்தில் நடு இடமாகிய சிதம்பரத்தைக் குறிப்பிடுவது போல, உடம் பின் உட்புறத்தில் நடு இடமாகிய இதயத்தையும் அதோடு தொடர்புடைய நடு நாடியையும் குறிப்பிடுகின்றது. எனவே திருச்சிற்றம்பலம் என்று உணர்ந்து சொல்லும்போது நம் உணர்வு – இதயம், நடு நாடி அதன் வழியே மூளை ஆகிய இடங்களுக்குப் போய்ச் செழுமை பெறுகின்றது. அதன் பயனாக நன்கு பாடவும் பாடியதை மேன்மேல் உணரவும் முடிகிறது. எனவே 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லி உணர்ச்சியை ஒருமுகப்படுத்திக் கொண்டும் செழுமையாக்கிக் கொண்டும், பதிகத்தைத் தொடங்க வேண்டும்.**

**– அழகரடிகள் –**

# சமயம் ஒரு வாழ்வியல் – 5

- கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் -

வாழ்க்கை மகிழ்வாக இருக்கவேண்டும் என்பதே எல்லோருடைய விருப்பமாகும். ஆனால் அதை எப்படி நிறைவேற்றுவது? முன்னோரது வாழ்வியல் எமக்கு வழிகாட்டியாக உள்ளது. அதை அப்படியே பின்பற்ற முடியுமா? பின்பற்ற வேண்டுமா? காலத்தோடு ஒட்டிய மாற்றங்களுக்கு ஏற்ப வாழ்வியலும் மாறவேண்டும் என்ற கருத்தும் தோன்றி நிலைபெற்று வருகிறது. இந்நிலையில் மனத்தை நெறிப்படுத்திப் புலன்களை வசப்படுத்திச் சீரான ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கு வழி என்ன?

வாழ்க்கையை "எமது நலன்" என்ற நிலையை முன்னிலைப்படுத்தித் திட்டமிடுகையில் அது சிக்கல் நிறைந்த ஒரு செயற்பாடாகவே தோன்றும். "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற நம்பிக்கையை ஊட்டுவது சமயமே. பிறப்பு முதல் இறப்பு வரை மனித வாழ்வியலைச் சைவம் வகுத்துக் காட்டியுள்ளது. உடல் வளர்ச்சி நிலைகளையும் அறிவின் முதிர்ச்சி நிலையையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்வியலின் படிமுறைக் கிரமமான வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு பல செயற்பாடுகள் நடைபெற்றுள்ளன. அவை இயற்கையின் பருவ மாற்றங்களோடு இணைக்கப்பட்டுள்ளன.

"தனிமனிதன்" என்ற சுருங்கிய நிலையில் எதையும் எண்ணுவது தவிர்க்கப்பட்டது. சுற்றமும் சூழலும் மனிதன் எண்ணத்தில் பரவியிருந்தது. "குடும்பம்" என்ற கூட்டு வாழ்க்கையின் பயிற்சியும் செயல்வினைத் திறனும் பரந்துபட்டிருந்தது. "வழிபாடு" என்னும் சீர்மியம் மனித மன வளத்தைச் செம்மைப்படுத்தியது. இயற்கையையும் செயற்கையையும் பகுத்து அறிந்து செயற்படும் ஆற்றலை வழங்கியிருந்தது. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற மனப்பதிவு வாழ்வியலின் மந்திரச் சொல்லாகப் பேணப்பட்டது.

இயற்கையின் பேராற்றல் எல்லோராலும் உணரப்பட்டிருந்தமையால் இயற்கையைப் பணிந்து வாழும் முறைமை தோன்றியிருந்தது. இயற்கையின் இரு சுடர்களான கதிரவனும் சந்திரனும் நாளாந்த வாழ்க்கையில் காலத்தின் கடப்பை உணர்த்தும் கருவிகளாக அமைந்தன. மாரியும், கோடையும், இளவேனிலும் பனியும் எனப் பருவமாற்றங்கள் மனிதனால் ஊன்றிக் கவனிக்கப்பட்டன. நிலத்து விளைபொருட்களின் பெருக்கத்திற்கு இயற்கையின் கொடைவளமே காரணம் என்பதை எல்லோரும் நன்கு உணர்ந்திருந்தனர். தட்ப - வெப்ப நிலைக்கேற்ற உணவுப்பழக்கம் மக்களிடையே பெரிதும் பேணப்பட்டது. உடல்நலம் பெறவேண்டி வழிபாடு செய்யும் நடைமுறையும் தோன்றியிருந்தது.

மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு மனவளம் இன்றியமையாதது என்ற எண்ணம் எல்லோரிடமும் நிலைபெறுவதற்குச் சமயநெறியும் துணைநின்றது. அன்பு செய்தலும் தொண்டு செய்தலும் மனிதனுடைய வாழ்க்கைப் பயணத்தில் சுமந்து செல்லும் பொதிகளாகக் கருதப்பட்டன. பிறருடைய துன்பங்கண்டு உருகும் அன்பு உள்ளம் தான் சமயநெறியால் போற்றப்பட்டது. துன்புறும் மக்களை இனிய சொற்களால் ஆறுதல்படுத்தும் பணியை அனைவருமே செய்யலாம். பிறருடைய துயர்துடைக்கும் பணி என்பது தெய்வீகப் பணிக்கு நிகரானது. இதமான சொற்கள் துன்பத்தின் வலியால் துடிக்கும் உள்ளங்களை ஆறுதலடையச் செய்யும். மனத்திலே வடுவைத் தாங்கி அதன் வலியால் தவிக்கும் மக்களை இனங்கண்டு அவர்களுக்கு அன்புடைய சொற்களால் ஒத்தடம் கொடுக்கும் மருத்துவப்பணி மிக உன்னதமானது. புரையோடிப்போன துன்பச் சுமையை இறக்கிவைக்க ஒரு நம்பிக்கையான அன்புடையவரைத் தேடும் இயல்பு மனிதனது இயற்கை. "மூளாத் தீபோல் உள்ளே கனன்று முகத்தால் மிக வாடி" யிருப்போரைக் கண்டு வாளாதிருத்தல் கூடாது. எந்தவிதமான செலவுமின்றி ஒருவரை மகிழ்வுறுத்த அன்புகாட்டினால் போதும். "உன் வலியை நான் உணர்ந்திருக்கிறேன்" என்பதை உணரவைத்தால், இனிய சொற்களால் பரிவுடன் உரையாடினால் சோர்ந்த உள்ளங்கள் மீண்டும் துடிப்புடன் செயற்படத் தொடங்கும்.

சமய வாழ்க்கையில் "தொண்டு செய்தல்" ஓர் இன்றியமையாத செயற்பாடாகும். பிரதிபலன் கருதாத செயற்பாடே உண்மையான தொண்டு ஆகும். எங்கும் எதிலும் தொண்டு மனப்பாங்குடன் செயற்படலாம். இறை வழிபாடு நடைபெறும் இடங்களில் தொண்டு செய்பவர், மகிழ்ச்சியை நேரிலே காணும் பேறு பெற்றவர். உடம்பினால் தொண்டு செய்பவருடைய உடல்நலம் சீராக இருக்கும். சுற்றுப்புறச் சூழலை அழகுபடுத்தும் தொண்டுப் பணியால் எல்லோரையும் மகிழச் செய்யலாம். தொண்டர் தம்பெருமை பேசலரிது. சைவநெறி நின்றோர் வாழ்வியலில் தொண்டுப் பணியின் சிறப்பைப் "பெரிய புராணம்" நன்கு விளக்கியுள்ளது.

மக்களை நலமாக வாழவைக்க அன்பும் தொண்டும் தான் உதவும். இதனைச் சமயவாழ்வியல் மூலமாக உணர்ந்தோர் பலருளர். துன்பத்தின் நிழல் கூடத் தொண்டர் மீது படியாது. சுயநலமின்றிப் பரநலத்தோடு செய்யப்படும் தொண்டுப்பணியே அதி உயர்வான பணியென அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. "இறைவனே தொண்டர்களுக்கு மிக எளிமையாக வந்து ஏற்றது செய்வான்" என்ற நம்பிக்கை முன்னோரிடமிருந்தது. தொண்டர்களை வணங்கும் வழக்கமும் முன்பு இருந்தது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தொண்டுப் பணி செய்து தமது வாழ்வில் மகிழ்ச்சியைக் கண்டனர். ஆழ்வார்களில் "தொண்டரடிப்பொடியாழ்வார்" என ஒருவர் இருந்துள்ளார். திருமாலடியவர் கால்பட்ட இடத்து மண்ணையெடுத்துத் தனது நெற்றியிலே சூடிக்கொள்ளும் பணிவுடைமை அவரிடம் மிக்கிருந்தது. இறைவனுக்குத் "தொண்டர் நாதன்" எனச் சிறப்புப்பெயர் வழங்கப்பட்டிருந்தது. தொண்டும் அன்பும் துணையாகக் கொண்டு வாழும் பயிற்சியைச் சமயநெறி காட்டி நிற்கிறது. அதனைப் பற்றிக்கொள்வது மனித வாழ்க்கைக்கு என்றும் மகிழ்ச்சி தரும். ❋

**மக்கள் நலமாக வாழ; மற்றையோரை நலமாக வாழவைக்க அன்பும் இன்சொல்லும் தொண்டும் அத்தியாவசியமானவை. இதை உணர்ந்து செயற்படுவது தான் வாழ்க்கை, சமய வாழ்க்கை.**

# எங்கள் பெயரால் இறைவனுக்கு "இவர்" என்ன சொல்கிறார்?

வித்யா பூஷணம் பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா B. A. (Hons)
(கோப்பாய் சிவம்)

இந்துக்களாகிய நமது நாளாந்த வாழ்க்கையில் ஆலயவழிபாடு முதன்மை பெறுகிறது. ஆலய வழிபாட்டில் கிரியைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. கிரியைகளில் மந்திரங்கள் முழு இடத்தையும் பிடித்துள்ளன. மந்திரங்கள் வடமொழியில் அமைந்துள்ளன. வடமொழி நமக்குப் புரியாத மொழியாக உள்ளது. இது வழிபடுவோரில் சிலருக்கு சங்கடத்தை ஏற்படுத்துவது இயல்பானதே.

கிரியைகள் நடைபெறும்போது நாம் அங்கு சாட்சியாக நிற்கிறோம். எங்கள் கைகளில் தர்ப்பையாலான பவித்திரம் இருக்கிறது. எங்கள் பெயர்களையெல்லாம் அங்கு சிவாச்சாரியர் கூறுகிறார். அவ்வளவும் நமக்குப் புரிகின்றன. அதற்குமேல் அங்கு நமக்குப் புரியாத இரு விடயங்கள் உள்ளன.

அங்கு நிகழ்பவை என்ன? அங்கு சொல்லப்படும் மந்திரங்களின் பொருள் என்ன? இவ்விருவிடயங்களுக்கும் அப்பால் இவற்றை இவ்வாறு செய்வது ஏன் என்ற மூன்றாவது கேள்வியொன்றும் முளைப்பதில் வியப்பில்லை.

இவை நீண்டகாலமாக மக்கள் மனத்தை அரித்துக் கொண்டிருப்பவைதான். ஆனால் அவற்றைத் தெரிந்து கொள்ளவோ, புரிந்துகொள்ளவோ எடுக்கப்படும் முயற்சிகள்தான் மிகக் குறைவாக உள்ளன. அறிந்து கொள்ளும் ஆர்வம் அதிகரிக்க வேண்டும். அதனை இன்று ஓரளவு காணமுடிகிறது. அடுத்தபடியாக அறிந்து கொள்ள முயற்சி எடுக்கவேண்டும். அறிந்தோர் அதனைப் பிறருக்கு அறியத்தரும் முயற்சியும் மிக அதிகமாக வேண்டும். அதுதான் நம்மவரிடத்தில் மிகக்குறைவு. அறிந்தவராகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் பலரும் உண்மையில் அவற்றை அறியாதவராக இருப்பதும் முக்கிய குறைபாடாக உள்ளது.

**கிரியைகள் நிறைந்த சமயம் சைவசமயம். அவற்றின் நோக்கம், விபரம், உரிய மந்திரம், மந்திரத்தின் பொருள் போன்றவற்றைத் தெளிவாக விளங்கிக் கொண்டால் மனத்தை ஒருமுகப்படுத்தி பூரண ஈடுபாட்டுடன் அவற்றை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும், ; உரிய பலனும் கிடைக்கும். 'சைவாலயக் கிரியைகள்' 'இதுதான் இந்து மதம்' 'சைவ விரதங்களும் விழாக்களும்' போன்ற பயனுள்ள பல நூல்களை எழுதி வெளியிட்டவரும் தமிழ், சமஸ்கிருத ஆங்கில மொழிகளிற் பாண்டித்யமுடையவரும் சிறுகதை எழுத்தாளரும் கவிஞருமான பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா (கோப்பாய் – சிவம்) சில பூர்வாங்கக் கிரியைகள் பற்றி 'எங்கள் பெயரால் இறைவனுக்கு 'இவர்' என்ன சொல்கிறார்?' என்ற பொதுத் தலைப்பில் அளிக்கும் விளக்கங்கள் 'இந்து சாதனம்' வாசகர்களுக்கும் பயன் பல நல்கும் என நம்புகின்றோம்.**

எல்லாவற்றுக்கும் மேலாக, சமய வழிபாட்டிலே பக்தியும் நம்பிக்கையும் தான் முதன்மை பெறுகின்றன. அதனால் இவை பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபடாமல் அர்ச்சகரிடம் நமது பொறுப்பை ஒப்படைத்துவிட்டால் - அதாவது நமது பெயர், நட்சத்திரம் என்பவற்றை அவரிடம் கூறிவிட்டால் - மீதி அவர் பொறுப்பு என ஒதுங்கிக்கொள்வோர் பலராக உள்ளனர்.

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா"

என்று தேவாரத் திருமுறையே கூறுகிறதல்லவா? அதனால் இவற்றை நாம் சோதிக்க (ஆராய) வேண்டாம் எனக் கூறுவோர் பலர் உள்ளனர். ஆனால், அந்த அடியை நன்கு கவனித்துப் பார்த்தால் "சோதிக்க வேண்டா" என்பதற்கு முன் "மிக்கு" என்ற சொல்லும் இருப்பதைக் காணலாம். எனவே, எதையும் ஆராய்ந்தறிந்து பின்பற்ற வேண்டும் என்ற பொது வழக்கம் இதனால் அடிபட்டுப் போகவில்லை. மிக அதிகமாக - அவநம்பிக்கையோடு - சோதித்துப் பார்க்க வேண்டாம் என்பதே இதன் பொருள். நம்பிக்கையோடு ஆராய்வது நலமானதே.

இவ்வகையில், ஆலயக் கிரியைகளில் வேதமந்திரங்கள், ஆகம சுலோகங்கள், பிரார்த்தனைகள், விதிகள், இணைப்பு வாக்கியங்கள், மூல மந்திரங்கள் எனப் பல்வேறு வகையான சமஸ்கிருத மந்திரங்கள் பற்றியும் அவை கூறும் பொருள் பற்றியும் ஆன்மீகவாதிகள் யாவரும் அறிந்திருக்கவேண்டியது அவசியம். அதற்காக மேடைகளையும் ஊடகங்களையும் பயன்படுத்தச் சமய அறிஞர்கள் முன்வர வேண்டும். முக்கியமாக சிவாச்சார்யப் பெருந்தகைகள் இவற்றைத் தாமும் நன்கு தெரிந்திருப்பதோடு ஆலயத்திற்கு வரும் ஆஸ்திக அன்பர்களுக்கு அவ்வப்போது தெரிவிப்பவர்களாகவும் இருப்பது மிகவும் நன்று. இவ்வகையில் ஓர் ஆரம்ப முயற்சியாக எல்லாக் கிரியைகளின் தொடக்கமாக அமைகின்ற (ஆலயக் கிரியைகள் மட்டுமல்லாமல் இல்லறக் கிரியைகளிலும்கூட) சில கிரியைகளில் சொல்லப்படுகின்ற மந்திரங்களின் பொருள் விளக்கங்களை இங்கு நோக்குவோம்.

**பூர்வாங்கக் கிரியைகள்:**

எந்தக் கிரியையாயினும் ஆரம்பத்தில் பஸ்மதாரணம், (விபூதி தரித்தல்) பவித்திர தாரணம் (தர்ப்பை அணிதல்) பிராணாயாமம், சங்கல்பம், விநாயக வழிபாடு, கலசபூஜை, (தீர்த்த பாத்திரத்திற்கு) கண்டாபூஜை (மணிக்கு) , தீபபூஜை (திருவிளக்கிற்கு) வருண கும்ப பூஜை, புண்ணியாக வாசனம், பஞ்சகவ்ய பூஜை முதலியன வழமையாக இடம்பெறும். இவை பூர்வாங்கக் கிரியைகள் (பூர்வ- ஆரம்ப, தொடக்க ) எனக் கூறப்படும். (பூர்வக்கிரியை வேறு, பூர்வாங்கக் கிரியை வேறு)

→

# எங்கள் பெயரால் இறைவனுக்கு "இவர்" என்ன சொல்கிறார்?

**பஸ்மதாரணம் (விபூதி தரித்தல்)**

விபூதி சிவ சின்னங்களுள் ஒன்று. சைவர்கள் எந் நேரமும் விபூதி அணிந்திருத்தல் அவசியம். "ஆளடை யாளத்திற்காகத் திருநீறு இட்டுக்கொள்" என உபநிடத வாக்கியம் கூறுகிறது. நாம் எப்போதும் சிவ சிந்தனை யிலிருந்து நீங்காதிருப்பதற்கு விபூதி உதவுகின்றது. "வாழ்க்கை நிலையற்றது, நாம் என்றோ ஒரு நாள் சாம்பராகிவிடுவோம்" என்ற எண்ணம் எங்கள் மனத்தில் இருப்பதற்கும் ஒருவகையில் உதவுகின்றது இந்தத் திருநீறு. இந்த எண்ணம் இருக்குமானால் நாம் தீயவற்றை நீக்கி நல்லவற்றைச் செய்ய முயற்சிப்போமல்லவா?

விபூதி பசுஞ் சாணத்தினை நீறாக்குவதால் பெறப் படுகிறது. பசு சைவர்களின் போற்றுதலுக்குரியது. எல் லாத் தெய்வாம்சங்களும் பசுவில் இருப்பதால் கோமாதா என்றும், காமதேனு என்றும் போற்றி வணங்குகிறோம். அதன் சாணமே நீறாகி வருவதனால் அதற்கு ஒரு தனித் தன்மை உண்டு. பசுஞ் சாணம் நல்ல ஒரு தொற்று நீக்கி என்றும் அதில் பல சிறப்பம்சங்கள் உள்ளன என்றும் மருத்துவ ரீதியிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. விபூதி யிலும் அத்தகைய சிறப்பம்சங்கள் உண்டு. உடலில் உள்ள தேவையற்ற நீர்த்தன்மையை உறிஞ்சும் தன்மை யும் விபூதிக்குண்டு. இவ்வாறு பல சிறப்பம்சங்கள் உள்ள விபூதியை நாம் ஒரு நற்கருமம் தொடங்குமுன் தரித்துக் கொள்வது அவசியமல்லவா? நெற்றியில் திருநீறின்றிச் செய்யும் எக்காரியமும் பலனளிக்காது. அதனால் எந்தக் கிரியையும் ஆரம்பிக்கும்போது விபூதி தரித்தல் அவசியம். அதுவும் மந்திர சகிதமாகத் தரிக்கும்போது இன்னும் சிறப் பல்லவா? அவ்வேளையில் சொல்லப்படும் சுலோகம் இது.

**ஸ்ரீகரம் ச பவித்ரம் ச ரோக தோஷ நிவாரணம்**
**லோக வஸ்யகரம் புண்யம் பஸ்மம் த்ரைலோக்ய சாதனம்.**

மூவுலகங்களிலும் மேலான சாதனமாகக் கரு தப்படும் விபூதியானது லக்ஷ்மீகரமானது. புனிதமானது. நோய்களையும் தோஷங்களையும் போக்கவல்லது. உலகோரை வசப்படுத்தவல்லது.

**பவித்ரதாரணம் (தர்ப்பை அணிதல்)**

விபூதி தரித்து நம்மைப் புனிதப்படுத்தி, சிவசிந்தனை யில் நம்மை ஈடுபடுத்தி நம்மை ஆயத்தம் செய்து கொண்டோம். (On Your Mark) இனி அந்தக் காரியத்தில் ஈடுபடுவதற்கு நம்மைத் தயார்செய்ய வேண்டுமல்லவா? (Get set). அதற்காக, தர்ப்பையாலான பவித்திரம் என் னும் ஒன்றை நமது மோதிர விரலில் அணிந்துகொள் கிறோம். தர்ப்பை புனிதமானது. நமது சமயக் கிரியைகள் யாவற்றிலும் அது முக்கிய இடம்பெறுகிறது. சூழலில் இருக்கும் மாசுக்களை நீக்கித் தூய்மை செய்வதுடன் மந்திர ஒலிகளைக் கிரகித்துச் சேகரித்துப் படிப்படியாக வெளிவிடுவதிலும் வல்லது. ஒரு கும்பத்தை உரு வாக்கும்போது கும்பத்தினுள்ளேயும் வெளியேயுமாக இரு கூர்ச்சங்களும் ஒரு பவித்திரமும் தர்ப்பையால் செய் யப்பட்டு அங்கு போடப்படுகின்றன. தெய்வ சக்தியைக் கும்பத்தில் தேக்கிவைக்க அவை உதவுகின்றன. அதே போலக் கிரியைகளில் ஈடுபடும் நாம் நமக்கு மனத் தூய்மை, மனத்தெளிவு, மன ஒருமைப்பாடு என்பவை ஏற்பட்டுக் கிரியைகளில் மனமொன்றி நிற்பதற்காகப் பவித்திரம் அணியப்படுகிறது. அதிக சக்திச்செறிவும் சிறப்பான அதிர்வுகளும் தர்ப்பையில் இருப்பதாக விஞ்ஞான ஆய்வுகள் கண்டறிந்துள்ளன.

நமது மோதிரவிரல் மிகச் சிறப்பான ஓரிடம். நமது உடலில் சில இடங்கள் நரம்புகளின் சந்திப்புக்களாகவும் பல உணர்வுகளைத் தூண்டல் செய்யக்கூடிய இயல்பு டையவையாகவும் உள்ளன. இந்த இடங்களில் அதற் குரிய ஊசிகளை முறைப்படி ஏற்றுவதன் மூலம் உடல் நோய்களை மாற்றி ஆரோக்கியம் ஏற்படுத்தும் சீன வைத்திய முறையாகிய அக்யூபங்ச்சர் முறையை இப் போது பலரும் அறிவர். இதனை முன்னரே வேறு வகை களில் அறிந்திருந்த நமது முன்னோர்கள் இத்தகைய இடங்களில் துளையிட்டு தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களாலான நகைகளை அணிந்தும் பலன் பெற்றிருக்கின்றனர். செடில்காவடியும் இத்தகைய ஒன்றே. கழுத்திலேயும் மணிக்கட்டிலேயும் நகைகளை அணி வதன் மூலம் இத்தகைய நற்பலன்களைப் பெறமுடியும் என்பதை விஞ்ஞான ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

மோதிர விரலின் அடிப்பகுதி இத்தகைய சிறப்புப் பொருந்திய ஒரு இடமாகவும் தர்ப்பை நாம் முன்னரே பார்த்தபடி நல்ல உணர்வுகளைத் தூண்டக்கூடியதாகவும் இருப்பதனால் சங்கல்பம் செய்வதன் ஓரங்கமாகப் பவித்திரம் அணிதல் நடைபெறுகிறது. இந்நேரத்தில் தர்ப்பையாலான ஆசனத்தில் இருக்கும்படியும் சொல் லப்பட்டுள்ளது. அதற்கான வசதிக்குறைவுகள் காரண மாக பாவனையாக இரு தர்ப்பைகளைக் காலின் கீழ் போட்டுவிட்டு அமரும்படி கேட்கப்படுகிறோம். அதே போலக் கைவிரலில் பவித்திரம் அணிந்தபின் மலர் களுடன் சில தர்ப்பைகளை உள்ளங்கைகளினுள்ளே இடுக்கிக்கொண்டுதான் சங்கல்பம் ஆரம்பமாகிறது. தர்ப்பை அணியும்போது சொல்லப்படுவது;

**ததேவ லக்னம் சுதினம் ததேவ தாராபலம் சந்த்ர பலம் ததேவ**
**வித்யாபலம் தைவபலம் ததேவ கௌரீபதே தேங்க்ரி யுகம் ஸ்மராமி.**

கௌரீ பதியாகிய சிவபிரானே உனது பாதங்களி ரண்டையும் நினைக்கின்றேன். அதனால் (இச்செயல் தொடங்கும் இந்த நேரத்துக்குரிய) நாள், லக்னம் என்பன சுலபமானவையாகவும் தாரை, சந்திரன் ஆகியவற்றின் அடிப்படையிலும் சுகம் செய்வனவாகவும் கல்வியறிவி னாலும் தெய்வத்தின் துணையினாலும் அவை சிறந்து விளங்குவனவாகவும் அமைகின்றன.

→

## எங்கள் பெயரால் இறைவனுக்கு "இவர்" என்ன சொல்கிறார்?

**ப்ராணாயாமம் (மூச்சுக் கட்டுப்பாடு)**

யோகமார்க்கத்தின் ஓரம்சம் பிராணாயாமம். யோகம் என்பது நமது உடலையும் மனத்தையும் நமது கட்டுப் பாட்டில் கொண்டுவந்து ஒருமுகப்படுத்தும் மார்க்கம். அதற்குதவும் சுவாசக் கட்டுப்பாட்டுப் பயிற்சியே பிராணா யாமம். உலகியல் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் எமக்கு. அதுவும் இந்த இயந்திரமயமான இன்றைய வாழ்க்கையில் ஒரே நேரத்தில் எத்தனையோ பிரச் சினைகள் இருக்கும். அவை யாவும் நமது மனத்தைக் குடைந்துகொண்டிருக்கும். அலைபாயும் மனத்தினால் நாம் இறைவனை வழிபடுதல் இயலாது.

மனம் இறைவன் மீது லயித்து நமது சிந்தனை ஒருங்கு குவிக்கப்படும் போதுதான் பிரார்த்தனைகள் பலனளிக்கும். அதற்கு வழிவகுப்பதே பிராணாயாமம். புறச்சிந்தனைகளை ஒதுக்கி மனத்தை அகவயப்படுத்தி இறைநினைவைக் கிளரவைத்து நாம் இப்போது மற்றெல் லாவற்றையும் மறந்து இக்கிரியையில் ஒன்றுபடப்போகி றோம் என்ற உணர்வோடு இந்த சுவாசப் பயிற்சியில் ஈடுபடுகிறோம். இப்போது சாதாரணமாக நமக்காகக் கிரியைகளைச் செய்யப்போகின்ற அர்ச்சகரே பிராணாயா மத்தில் ஈடுபடுவது வழக்கம்.

**ஓம் பூ: ஓம் புவ: ஓம் சுவ: ஓம் மஹ: ஓம் ஜன: ஓம் தப: ஓம் சத்யம். ஓம் தத்சவிதுர்வரேண்யம். பர்க்கோ தேவஸ்ய தீமஹி. தியோ யோ ந: ப்ரசோதயாத். ஓமாபோ ஜ்யோதீரஸோ அம்ருதம் ப்ரம்ம பூர்புவஸ்வரோம்.**

சுவாசக் கட்டுப்பாடாகிய பிராணாயாமம் பிரணவ மந்திரமாகிய ஓங்காரத்தில் தொடங்கி பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மஹாலோகம், ஜனலோகம், தபோலோகம், சத்யலோகம் எனப்படும் ஏழுலகங்களை யும் கூறி அதன்பின் காயத்திரி மந்திரத்தைச் சொல்லி நிறைவு பெறுகிறது.

காயத்திரி மந்திரத்தின் பொருள். எந்த ஒளிக்கடவுள் நமது புத்தியைத் தூண்டுகிறாரோ அவரை மனத்தில் தியானிப்போமாக.

**விநாயகரைத் துதித்தல்**

எக்காரியமும் விநாயகர் வழிபாட்டோடு தொடங்கும் நமது பாரம்பரிய மரபுமுறைப்படி அமைவதே இது. விக்கினங்களின்றி நமது கருமம் நிறைவேறவேண்டு மென்ற பிரார்த்தனையோடு நெற்றியிலே குட்டுகிறோம். ஏன் குட்டி வணங்கவேண்டுமென்பதற்குக் கயமுகாசுரன் கதையும் அகத்தியர் கதையும் காரண விளக்கங்களைத் தருகின்றன என்றாலும் முன்னரே குறிப்பிட்டவாறு நமது உடலின் சில இடங்களில் சில முக்கிய இயல்புகள் இருக்கின்றன. அவ்வகையில் நெற்றியின் இரு மருங் கிலும் குட்டும் போது அமிர்த கலசங்கள் கலங்கி உடலை நனைக்கின்றன என்று ஞானியர் கூறுவர். இவ்வாறான செயற்பாடுகளில் நமது உடலின் கருவிகள் (அங்கங்கள்) ஈடுபட, வாய் மந்திரங்களையோ திருமுறைகளையோ கூற, மனம் இறைவனின் திருவுருவையும் அவரது கருணைச் செயல்களையும் நினைக்க அவ் வேளையில் நமது ஆன்ம ஈடேற்றத்தின் முதல்நிலையாகிய ஒருமைப் பாடு சித்திக்கத் தொடங்குகிறது.

திரிகரணங்களாலும் அதாவது மனம், வாக்கு, காயங்களால் (நினைவு, சொல், செயல்) இறைவனோடு ஒன்றிநிற்றல் எனப்படும் நிலை இதுவே. இவ்வேளையில் சொல்லப்படும் விநாயகர் வணக்க சுலோகமும் அதனைத் தொடர்ந்து சொல்லப்படும் சில மங்கள சுலோகங்களும் இவை:

**சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்**
**ப்ரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்னோப சாந்தயே.**

வெண்மைநிற வஸ்திரம் தரித்தவரும் எங்கும் நிறைந்தவரும் நான்கு கரங்களுடையவரும் மலர்ந்த முகத்தையுடையவருமாகிய விநாயகரை எல்லா இடை யூறுகளும் நீங்குதற் பொருட்டுத் தியானிப்போமாக.

**மானசம் வாசிகம் பாபம் கர்மணா சமுபார்ஜிதம்**
**ஸ்ரீ சிவஸ்மரணேனைவ வ்யபோஹதி ந ஸம்ஸயஹ.**

மனத்தாலும் வாக்காலும் செயல்களாலும் நாம் செய்துகொண்ட பாவங்கள் சிவனை நினைப்பதால் ஐய மின்றி அழிந்துவிடுகின்றன.

**திதிஸ் சிவஸ் ததாவாரோ நக்ஷத்ரம் சிவ ஏவச**
**யோகஸ்ச்ச கரணம் சைவ சர்வம் சிவமயம் ஜகத்.**

திதி, நட்சத்திரம், வாரம், யோகம், கரணம் என்னும் பஞ்சாங்க உறுப்புக்களாகிய இவ்வுலகிலுள்ள கால வரையறை எல்லாமே சிவமயமாக, மங்கலமாக இருக்கட்டும். ❋ **(வளரும்)**

## நமது கடமை

**ஓர் இனத்தின் தனித்துவத்தை அடையாளங் காட்டி நிற்பன, அவ்வினத்தின் மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்கள். நமது தமிழ் இனத்தின் இந்த விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியினரிடம் கையளிக்கவேண்டிய கடமைப்பாடு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.**

**– பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
**(இ. ஜெயகாந்தனின் மிருதங்க அரங்கேற்ற விழாவில்)**

# கைலாச நாதர் பிள்ளையார் கோவில்

- சொல்லின் செல்வர் இரா. செல்லவடிவேல் -

- இந்துசாதனம் சித்திரை 2009 - 03 ஆம் பக்கத் தொடர்ச்சி -

கைலாய பிள்ளையார் கோவிலுக்குச் சொந்தமான காணிகளின் குத்தகைப் பணத்தைத் திருமதி இராமலிங்கம் இலட்சுமி அம்மாளே பெற்று வருகின்றார். பெருந்திருவிழாக்களின் போது, ஆலய நிர்வாகி என்றவகையில் அவருக்கே காளாஞ்சி வழங்கப்படுகின்றது.

இவருடைய கணவர் திரு. பொன்னம்பலம் இராமலிங்கம் மனேஜராக இருந்தபோது திரு.செ. சுந்தரலிங்கம் (நாடாளுமன்ற, வவுனியாத் தொகுதி முன்னைநாள் உறுப்பினர்) திரு. மாணிக்கம், திரு. குமாரசுவாமி (நீதவான்) திரு. சுந்தரம் நடராசா, திரு. கனகசபை நாகேந்திரன் ஆகியோர் நிர்வாகத்துக்கு உதவியாக ஆலோசனை வழங்கி வந்தனர். இப்போது பிரபல பாடகியாக விளங்கும் செல்வி நித்தியசிறீ அவர்களின் பாட்டியாரான டி.கே. பட்டம்மாள் அவர்களை இங்கே வரவழைத் துக் கர்நாடக இசைக்கச்சேரிகளை நடத்திக் கட்டுத்தேரொன்றை இந்த ஆலோசனைக் குழுவினர் உருவாக்கினர்

ஆலயத்திலுள்ள பிள்ளையாருக்கும் சிவபெருமானுக்கும் தனித்தனியாகப் பெருந் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. சிவனுக்குரிய முதற் திருவிழா 1972 ஆம் ஆண்டில் ஆரம்பமானது. சித்திரா பௌர்ணமியைத் தீர்த்த உற்சவமாகக் கொண்டு பத்து நாட் திருவிழா பிள்ளையாருக்கு நடைபெறுகின்றது. ஆனி உத்திரத்தைத் தீர்த்தத் தினமாகக் கொண்டு சிவன் திருவிழாவும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இறைவன், சக்தியோடு சேர்ந்துதான் படைத்தல் முதலிய பஞ்சகிருத்தியங்களைச் செய்கின்றான். பக்தர்களுக்கு அருளும் பாவனையும் அவ்வாறே நடைபெறுகின்றது.

**படைப்பாதி தொழிலும் பக்தர்க்கருளும் பாவனையும்**
**இடப்பாக மாதராளோடு இயைந்துயிர்க் கின்பம் என்றும்**
**அடைப்பான் ஆம் அதுவும் முத்தி அளித்திடும் போதும் பாசம்**
**துடைப்பான் ஆம் தொழிலும் மேனி தொடக்கானேல்**
**சொல்லொணாதே.**

சிவப்பரம்பொருள் பஞ்சகிருத்தியம் செய்வதற்கு என்ன என்ன வேடம் போட்டுக்கொள்கின்றதோ அது அதற்கு ஏற்ற பெண் வேடத்தைச் சக்தியும் போட்டுக் கொள்கின்றது.

இப்படி இருந்தும், சிவாலயங்களிலே அம்பிகைக்குத் தனியான சந்நிதிகள் முற்காலத்தில் இருக்கவில்லை. வடக்கே உள்ள சிவாலயங்களிலே சக்திக்குத் தனிச் சந்நிதிகள் இல்லை. தமிழ்நாட்டிலே, பிற்காலச் சோழர்கள்தான் தனியாக அம்மன் சந்நிதிகளை உருவாக்கினார்கள்.

சிவனுக்குச் செய்யப்படும் பூசை, சக்திக்கும் உரியதாகும். நல்லூர்க் கைலாயநாதர் கோவிலில், சிவனுக்கும் அம்பாளுக்கும் சேர்த்தே பெருந்திருவிழா நடைபெறுகின்றது. பரம்பொருளை "அர்த்தநாரீஸ்வரர்" ஆகக் கருதும் சரியானமுறை இங்கே பேணப்பட்டு வருகின்றது.

இராமலிங்கம் இலட்சுமி அம்மாளின் பெண்பிள்ளைகளுள் மூத்தவரான திருமதி ஞானரட்ணம் சிறீதேவி அவர்களின் உபயமாக பிள்ளையார் திருவிழாவின் கொடியேற்றம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

முன்னர் சிங்கையாரியன் கட்டிய கைலாயநாதர் கோவில், இப்போதுள்ள கோவிலுக்கு மேற்குத் திசையில் இருந்ததெனவும், அங்கிருந்து மட்டுவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்ட சிவலிங்கமே, முன்னர் மன்மதனால் வழிபடப்பெற்ற சிவலிங்கம் எனவும் "ஈழமண்டல சதகம்" கூறுகின்றது.

இப்போதுள்ள கோவில், நாவலர் வழங்கிய காணியிற் கட்டப்பெற்றுள்ளது. கோவில் உரிமை நாவலர் பரம்பரையினரிடம் உள்ளது. பிள்ளையார் கோவிலைக் கட்டுவதற்கு நேர்த்தி வைக்கும்படி இந்தியாவிலிருந்து. ஆறுமுகநாவலர் தன் தமையனார் தம்பு அவர்களுக்கு எழுதிய கடிதத்தைத் தான் பார்த்ததாகத் திருமதி இராமலிங்கம் இலட்சுமி அம்மையார் என்னிடம் கூறினார். அந்தக் கடிதத்தைத் திரு. செ. சுந்தரலிங்கம் தனக்குக் காட்டியதாகவும் கூறினார்

ஆலய அர்ச்சகர் பரமபரைப் பூசை உரிமை பெற்றவர் இந்த உரிமை எழுத்தில் உள்ளது. ஸ்ரீ கு. குமாரசுவாமி ஐயர், ஸ்ரீ. கு. குருசாமிஐயர் ஆகியோர் வரிசையில் ஸ்ரீ. கு. வைத்தீஸ்வரக்குருக்கள் (மணிக்குருக்கள்) இப்போது பிரதம சிவாச்சாரியாராகக் கடமையாற்றுகின்றார். ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், திருமதி இராமலிங்கம் இலட்சுமி அம்மாள் சார்பில், இவரே ஆலயத்தைப் பரிபாலித்து வருகின்றார். ஆலயம் இப்போது புதுப்பொலிவுடன் விளங்குவதற்கு இவர் மேற்கொண்ட பெருமுயற்சிகளே காரணம் என்பதை இலட்சுமி அம்பாள் குறிப்பிட்டார்.

மூன்றாவது கைலாயமாகத் திகழும் நல்லூர் கைலாய (நாத) பிள்ளையார் கோவிலுக்குச் சென்று, சௌபாக்ய கௌரி மண்டபத்தில் நின்று இறைவனைத் தரிசித்து அவனருள் பெற்றுய்வோமாக. (முத்துராசக் கவிராயரின் "கைலாயமாலை"யின் உதவியுடனும், திருமதி இராமலிங்கம் இலட்சுமி அம்மாள் மணிக்குருக்கள் முதலியோர் அளித்த தகவல்களுடனும் இக்கட்டுரையை எழுதியுள்ளேன்.) ❋

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்து சாதனம்
## Hindu Organ
email: editor @ hindu organ. com

விரோதி ஸு வைகாசி மாதம் ௴ 1ஆம் உ (15.05.2009)


# நல்வழியை நம்வழியாக்குவோம்!

நாம் வாழும் இந்த உலகம், காலத்துக்குக் காலம் பேரழிவு களையும், பெருங் குழப்பங் களையும் சந்தித்துள்ளது.

பூகம்பம், புயற்காற்று, சுனா மிப் பேரலை போன்றவை இயற்கையின் சீற்றத்தின் வெளிப்பாடுகள்; உலகப் போர்கள், உரிமை கேட்டெழுந் தோரை அடக்கி ஒடுக்கிய கொடுமைகள் உலகப் பொரு ளாதார மையத்தின் தாக்குதல் முதலானவை வக்கிர மனங் களின் உக்கிரச் செயற்பாடு கள்.

இவற்றுட் பல. அவை நடப்ப தற்குப் பல ஆண்டுகள், நூற் றாண்டுகளுக்கு முன்னரே எதிர்வு கூறப்பட்டவை! அவ்வே ளைகளில் மக்கள் அவற்றை நம்பினார்களோ இல்லையோ குறிப்பிட்ட காலத்தில் அந்த அனர்த் தங்கள் நடந்து முடிந் திருக்கின்றன என்பது நினை வில் வைத்திருக்கப்பட வேண் டிய உண்மை.

மனிதனுக்கு மேலே ஒரு சக்தி இருக்கின்றது என்பதை எதிர்வுகூறல்களும் அவற்றின் நிறைவேற்றமும் நிரூபிப்ப துடன் மனிதருடைய நடத்தைப் பிறழ்வே இயற்கையின் சீற் றத்தைத் தூண்டுகின்றது என் பதையும் கோடி காட்டுகின்றன.

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பிரான்ஸ் நாட்டு மகா ஞானி ஒருவர் வெளியிட்ட எதிர்வு கூறலைப் பத்திரிகை கள் சில இப்போது நினை வூட்டுகின்றன.

இந்தியாவுக்கும் பாகிஸ்தா னுக்குமிடையே நீண்டகாலம் நிலவிவரும் பகைமை காரண மாக இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுள் – 2011 அல்லது 2012 இல் மூன்றாம் உலகப் போர் வெடிக்குமாம்.

இந்த இரண்டு நாடுகளுள் ஒன்றையோ மற்றதையோ ஆதரித்து அமெரிக்கா, ரஷ்யா, சீனா, சவுதி அரேபியா, சிரியா, இஸ்ரேல், ஜேர்மனி, பிரான்ஸ், லெபனான், ஈரான், அவுஸ்தி ரேலியா உள்ளிட் இருபத் தொரு நாடுகள் களமிறங்கு மாம்.

அணு ஆயுதங்களின் வீச் சினால் கடல் அலைகள் நூறு அடிவரை கொந்தளிக்குமாம்.

நூறு கோடி மக்களை இந்தப் போர் காவு கொள்ளக் கூடுமாம்.

இந்தியாவில் பஞ்சாப், குஜராத், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களும், எல்லைப் பகுதிகளும் இந்தியாவிற்கு அண்மையிலுள்ள இலங்கை யும் மிகவும் மோசமாகப் பாதிக் கப்படுமாம்.

இவற்றையும் இவற்று டன் தொடர்புடைய இன்னும் சிலவற்றையும் சொன்னார் நாஸ்டர் டமஸ் என்ற அந்த மகாஞானி.

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பெற்ற இவற்றை இப்போது நாம் வெளியிடுவதற்கு வலுவான காரணங்கள் உண்டு.

மிகவும் மோசமான பாதிப்பு களுக்கு உள்ளாகும் எனச் சொல்லப்பட்ட இலங்கையில் நாம் வாழ்கின்றோம் என் பதும், நடக்க இருக்கும் பேர வலத்தைப் பற்றி மக்களுக்கு அறிவிப்பது நமது இன்றி யமை யாக் கடமை என நாம் கருது வதும் ஒரு காரணம்.

மூன்றாம் உலகப்போர் தொடங்கும் என அந்த மகா ஞானி குறிப்பிட்ட 2011, 2012 ஆம் ஆண்டுகள் நம்மை விரை வாக அண்மித்துக் கொண்டி ருக்கின்றன என்பது மற்றொரு காரணம்.

அந்த மகாஞானி கூறிய எதுவுமே இதுவரை பொய்க்க வில்லை என்பது இன்னு மொரு காரணம்.

இவை அனைத்திற்கும் மேலாக, "எதிர்வுகூறல்களின்" வரலாற்றிலே முதன் முறை யாக, நடக்கவிருக்கும் அனர்த் தங்களைத் தடுத்து நிறுத்தக் கூடிய உபாயங்களை அந்த மகாஞானியே சொல்லியிருப் பதும் அவற்றில் அரசியல் நாற் றம் இல்லாமல் ஆன்மீக மணம் கமழ்ந்து கொண்டிருப்பதும் மிகவும் முக்கியமான கார ணம்.

'2006 ஆம் ஆண்டிலிருந்து இந்தியா பல சோதனைக ளைச் சந்திக்கத் தொடங்கும்; இறைபக்தி குறையும் ; அரசிய லிற் பற்பல மாற்றங்கள் நிக ழும் ; உண்மை தோல்வியைத் தழுவும்; பொய் வெற்றி பெறும் ; மக்கள் அலை பாய்ந்து திரிவார் கள்' என அந்த மகாஞானி சொன்னவை நிஜமாகிக் கொண்டு வருவது ஒரு மேல திகக் காரணம்.

'ஒரு நாட்டிலே பாவச் செயல்கள் பெருகும்போது அந்த நாட்டிலே சிக்கல்களும் கஷ்டங்களும் அதிகரிக்கவே செய்யும். எனவே பாவச் செயல் களைச் செய்யாமல் எல்லோ ருடனும் அன்புடன் இருங்கள். அவரவர் வீட்டில் தினமும் இறை வனைப் பிரார்த்தனை செய் யுங்கள். மனம் தெளிவாக இருக்கும். நல்ல சிந்தனை பிறக்கும். நெஞ்சுத் தைரியம் உண்டாகும். இறைசக்தி மிகப் பெரியது. நீங்கள் இவற்றைச் செய்யாவிட்டாலும் அந்த இறைசக்தி உங்களைக் கொண்டு அவற்றைச் செய் விக்கும் " என்ற மகாஞானி யின் அறிவுரை – அறவுரை, காலாதி காலமாக இந்துமக்க ளாகிய நாம் போற்றி வரு கின்ற பேருண்மை ஒன்றையே, பெருந் தத்துவம் ஒன்றையே அழுத்தந் திருத்தமாக வலி யுறுத்திக் கூறுகின்றது.

உண்மை, நேர்மை, அன்பு, பக்தி, பரந்த உள்ளம் போன்ற வற்றின் அடிப்படையில் நல்ல வற்றைச் செய்தால் – புண்ணி யங்களைச் செய்தால் நாட் டிலே சாந்தி நிலவும் ; சமா தானம் நிலவும் ; சந்தோஷம் நிலவும் ; பகைமையும் போரும் பறந்தோடிவிடும் ; இயற்கை யும் இறையும் மக்களுக்கு என்றும் இனியவற்றையே செய்யும். ஆகவே,

**புண்ணியமாம் பாவம்போம்**
**போனநாட் செய்தவவை**
**மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த**
**பொருள்– எண்ணுங்கால்**
**ஈதொழிய வேறில்லை எச்**
**சமயத் தோர் சொல்லும்**
**தீதொழிய நன்மை செயல்**

என்ற நல்வழியை நம்வழி ஆக்குவோமா? நடக்கும் என நம்பப்படும் பேரவலத்திலிருந்து நம்மையும் இந்த நாட்டையும் பாதுகாத்துக் கொள்வோமா?

❋

# இந்தோநேஷியாவில் இந்துத் தமிழர்கள்

**– ஆத்மஜோதி நா. முத்தையா –**

**(இந்துசாதனம் 2009 பங்குனி 14ஆம் பக்கத்தொடர்)**

AU - ஔ ; Toean - தூவான்: Soeara - சுவாரா : Koekoe - குக்கு: Boeah - பூவா: Biola - பியோலா: Boekoe - புக்கு: Doea - டுவா: Moeloet - மூலுட் ; Baik - பாய்க்: Mawloed - மௌலூட்: Boy - போய்: Boeboer - பூபூர் ; Sajoer - சாயூர்.

சில மெய்யெழுத்துக்கள் ஒன்று சேர்வதால் வேறு விதமான சப்தம் உண்டாகும். அவற்றையும் கீழ்க்காணும் உதாரணங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

Th - த் Tj, Ch } ச்: Ph-F; Ck- க் ;Kh-க்; Nj - ஞ்; Ng - ங்; sh- ஷ் ; Dj -ஜ் ; Li - ள் ; Ch-க்; எனச் சப்திப்பதும் உண்டு. Dh - த் (பாதம் என்னும் பதத்தில் "த" வின் சப்தம் ) Njanji - ஞாஞி : பாடல்: Gam - Pang - கம்பாங்: சுலபம்: Dja Ng - An - ஜாங்நான்: வேண்டாம் : Tje - Lana - ச்செலானா: கால் சட்டை: Djam - ஜாம்; கடிகாரம் : Tjampoer - ச்சம்பூர்: சேர் Keliling - கெலீலிங்: சுற்றிலும் : Tjabe- ச்சாபே: மிளகாய்: Pandjang - ப்பாஞ்ஜாங்: நிகளமான : Gadja - காஜா: யானை: Koetjing - கூச்சிங்: பூனை: Medja - மேஜா, மேசை, Andjing - அன்ஜிங் நாய்: Monjet - மோஞெட் : குரங்கு: Adharma - அதர்ம : அதர்மம்: Chabar - காபார்: செய்தி: Shanghai - ஷங்ஹாய்: பட்டினத்தின் பெயர்.

ஒரேவித மெய்யெழுத்துக்கள் இரண்டு சோடியாகச் சேர்ந்தால் அவைகளின் சப்தம் சற்றே அழுத்தமாக உச்சரிக்கப்பட வேண்டும்.

Ama - அமா: Amma - அம்மா: Ala - அலா ; Alla - அல்லா அல்லது அளா: Kana - கனா: Kanna - கன்னா அல்லது கணா.

ஒரு வார்த்தைக்குப் பின்னால் "2" போடப்பட்டால் ஒன்றிற்கு அதிகப்பட்டதெனக் குறிப்பிட அவ்வார்த்தையை இரண்டு முறை உச்சரிக்கவேண்டும். இது மலாய்ப் பாஷையில் மாத்திரம் வழங்கிவருகிறது.

Orange 2 - Orange, Orange: Anak 2 - Anak - Anak : Lemboe 2 - Lemboe, Lemboe.

காலத்திற்குக் காலம் உச்சரிப்பும் எழுத்துக்களும் மிகவேகமாக மாறிக்கொண்டிருக்கின்றன என்பதற்கு உதாரணம்.

Bus ஆங்கிலேயருடைய காலத்திலே இப்படி எழுதப் பட்ட சொல் Bas இப்படி ஆகி இப்போ Bis என்று எழுதப்படுகின்றது. Dukacita - துக்கா சீத்தா: கஷ்டம்: Tuhan - ரூகன்: இறைவன். இறைவன் என்ற சொல்லி லிருந்து பிறந்தது. Tuan- ரூஅன் : ஐயா, துரை, எஜமானன்: தூயன் என்ற சொல்லிலிருந்து பிறந்தது. Dawa- டேவா: தேவா, தேவி, தேவதா, தேவதை, தேவன் என்ற சொல்லிலிருந்து பிறந்தது. Sila- சீலா: சீலம், சீலம் என்ற சொல்லிலிருந்து பிறந்தது. Duka- துக்கா: துக்கம், துக்கம் என்ற சொல்லிலிருந்து பிறந்தது. Cinta - சின்தா: காதல், சிந்தை என்ற சொல்லிலிருந்து பிறந்தது. Sukacita - சுகாசித்தா: சுகம் - சந்தோஷம், சுகம் என்ற சொல்லிலிருந்து பிறந்தது. Tukam - துக்கம், Karma - கர்மா: Anugraha - அனுக்கிரகா: அனுக்கிரகம் : Tirkahaiu - தீர்க்காயு: தீர்க்காயுள்: Kapal - கபல்: கப்பல்: Tirai - திரை ; அலை: Harimau கரிமாவு - அரிமாவு: புலி: Kerbau- கெர்பவ்: எருமை. கறுப்பு ஆவு: கருமை நிறமுடைய எருமை: Singa - சிங்கா: சிங்கம்: Badai- பாடை: வாடைக்காற்று: Wadai - வாடை: பாடை - பிரேதப் பாடை: Mutiara - முத்தியாறா, முத்து ; Mutu - முத்து ; Ratna - இரத்தினா: இரத்தினம்: Manikam - மாணிக்கம்: Waiduri - வைடூரி: வைடூரியம்: Arak - அறக்: சாராயம்: Sura - சூறா: கள்ளு: Su - சூ: வெள்ளை: Nira- நீரா: பதநீர் Setia - செத்தியா: சத்தியம் : Karya - கார்யா: காரியம்: Saudara - சௌடாறா: சகோதரன்: Cendana - சென்டானா: சந்தனம்: Auvoh - ஔவோ: ஔவை ; Upi - உப்பி : உப்பை (ஔவையின் சகோதரியார்) Nani - நானி, நன்னி: பெண்: Kala- காலா: காலம் ; Purba - பூர்பா: பூர்வம்: Bulan - பூலன் : சந்திரன்: பூமியை வலம்வருபவன்: Tanggal - தங்கல் : சந்திரன், 27 நட்சத்திரங்களிலும் தங்கிச் செல்பவன்: பாசறை: Bambu - பம்பு ; மூங்கில் ; Surya - சூரியா சூரியன்; Pustaka - புஸ்தகா: புஸ்தகம்: Candra - சந்திரா: சந்திரன்: Pasai - பாசை: Parisai - பரிசை ; யுத்தவீரன், எதிரியின் ஆயுதம் தாக்காவண்ணம் தனக்கு முன்னால் பாதுகாப்பாக வைத்திருப்பது: Mandala - மண்டலா: மண்டலம்: Manga - மாங்கா: மாங்காய்: Palam - பழம்: பழம்: Guru - குரு : குரு: Sisya - சிஷ்யா: சீடன்: Siswa - சிஸ்வா ; சீடன் Warta - வர்தா: வர்த்தமானம்: Obat - ஓபாட்: மருந்து: Siswi - சிஸ்வி: சிஷ்யை - Kutumbur - குத்தும்பர் கொத்தமல்லி: Merica - மெரிக்கா : மிளகு: Kapur - கப்பூர்: கற்பூரம்: Air - ஏயர்: தண்ணீர்: Indrapura - இந்திரபுரா: இந்திரபுரி: Tirtanadi - தீர்த்தநாடி: தண்ணீர்த்தாங்கி: Indragiri - இந்திரகிரி: இந்திரகிரி ; Andai - ஆண்டை : எஜமானன் ; Andi அண்டி: காரோ வம்சத்தினர், குழந்தைகளை மரியாதை யாக அழைக்கும் வார்த்தை: Tolan - தோழன்: தோழன்: Akang - அகாங்: அக்கா; Kaka - காக்கா: அக்கா, அண்ணா: Abang - அபாங்: அண்ணா: Ute - உதே : அத்தை : Aya - ஐயா: தகப்பன், பெரியார்களை மரி யாதையாக அழைக்கும் வார்த்தை: Budi - புடி : புத்தி, செய்நன்றி மறவாமை: Bhuda - புத்தா: புத்தர்: Seri - சேரி : சிரித்த முகம்: Kekel - கெக்கேல்: எக்களிப்பு: Keledai - கெலேடை: கழுதை: Mama - மாமா: தாய் ; Gaja - காஜா: கஜம், யானை: Terai - ரேறாய் தாமரை: Swami - சுவாமி, கணவன்: Istri - ஸ்திரீ: மனைவி, ஸ்ரீமகள்: Istritewai - ஸ்ரீதேவி: நெல்: Suwarana - சுவர்ணா: சொர்ணம், தங்கம்: Pone - பொன்னி: பெயர், ஆறு: Tembega - தெம்பாகா : தாம்பரம், தாமிரம் என்ற லோகம்: Kolam - கோலம்: குளம், நீர்த்தேக்கம்: Gantang - கன்[illegible]: அளவை: Cupa சுபா: அளவை: Kati - கத்தி: நிறு[illegible]: Rupia - ரூப்பியா: ரூபா: Mega - மேகா: மேகம் T[illegible]gu - தங்[illegible] தாங்கு, தங்கு: Pohonkelapa பொகே[illegible] கெலப்ப[illegible] கற்பதாரு, தென்னை: Mapgasatwa - [illegible] மிருகசத்வா: மிருகப்பாதுகாப்பு: A[illegible]g - [illegible]: அம்மான்: Tambunam - தம்புனம்: புஷ்பம்: [illegible]n - சீ ஆஜியன்: சிறப்பு: அகத்தன்: Goni - கோ[illegible] சாக்கு: Siagan - சீஅகன்: சீரான அகத்தை உ[illegible]யவன்: Siregar - சிரேகார்: சீரகத்தார்: Colia - சோழியா: சோழன்: Pandia - பாண்டியா: பாண்டியன்: Maliala - மலியாலா: மலையாளம்: Palawi - பல்லாவி: பல்லவன்: Brahmana - பிராக்மணா: பிராமணன்: Nandai - நந்தை: நம்தாய், பெற்றதாய் : Pullukkollai - புல்லுக்கொல்லை: ஒரு ஊரின் பெயர்: Inang - இனாங்: ஈன்றநல்லாள் : Linga - லிங்கா: லிங்கம் ❋ (வளரும்)

**இந்துசாதனம் - 2009 பங்குனி இதழ் - 14 ஆம் பக்கத்திலிருந்து தொடரும் இக்கட்டுரை பிறநாடுகளில் வேற்று மொழிகளைப் பேசுவோர் மத்தியில் தமிழர் வாழும்போது தமிழ்மொழிக்கு ஏற்படும் பாதிப்புப் பற்றிக் கூறுகின்றது.**

# நாவலர் சரிதமோதும் நற்றமிழ்மாலை

– கவிஞர் இராசையா குகதாசன்

('இந்துசாதனம்' – 2009 சித்திரை – பக் 11 இன் தொடர்ச்சி)

26. மைக்கரி யுரியைப் போர்த்து மதிசடை சூடு மண்ணல்
முக்கணைப்போல்விளங்கும்புராணங்கள் மூன்று ஆகும்
தக்கநற் தொண்டர் புராணம் திருவிளை யாடற் புராணம்
அக்கணில் நடுக்கண் போல அமைந்தது கந்த புராணம்.

27. காஞ்சிமா நகரிற் கந்த கோட்டம்வாழ் கச்சி யப்பர்க்
காஞ்ஞையாற் திகட சக்கர என்றடி யெடுத்து வேலன்
வாஞ்சையோடளிக்கவாங்கிவளர்கந்தபுராணப் பாடல்
யாஞ்செய்த புண்ய மென்றே புளகித்து விழிநீர் சிந்தி

28. தந்தவிப் புராணந் தன்னிற் தகைந்துள காண்ட மாறு
வந்ததீப் பொறியு மாறு வகுத்துள சமய மாறு
மந்திர வடிவு மாறு தந்தவா தார மாறு
கந்தனின் முகமு மாறு கண்டிடு மென்று பின்னர்

29. அருவமு முருவ மாகி அருளிடு மறைந மக்கு
முருகனின்தோற்ற மூலமுணர்த்துமுற் பத்திக் காண்டம்
திருமுறைபோற்றுநாதன் திருவருள்வெளிப்பா டென்றே
தருபொருளதையெ டுத்துத் தக்கவ ருரைக்கக்கேட்டும்.

30. மாயமா மலங்கள் காட்டும் மயக்கமீ தூற லாலே
தீயமா குணங்களெல்லாம் சேர்ந்துநின் றாட்டல் தன்னை
ஆயமாக் குறிப்பாற் சூரை அறிமுகஞ் செய்து வைக்கும்
ஏயமா அசுர காண்டம் எடுத்துரை பொருளிற் தேர்ந்தும்

31. தீயதே புரிந்து மாயச் செருக்குடன் உலையு பேர்க்கும்
ஞாயிறே போல வெங்கும் நல்லதே புரிகு வார்க்கும்
ஏயதாம் நீதி கொள்ள எடுத்துரை தூது போல
ஆயதா யமைம கேந்திர காண்டமென் றறிந்து ணர்ந்தும்

32. முன்வினைமலங்கள் மூடமுகிழ்த்தெழைம்புலன்கள்யாவும்
பன்னிடு மலைப்பி னாலே பரிதவி யான்மா வுக்கு
நன்னருள் ஞான வேலா லம்மல வாதை போக்கி
துன்னிடு பாசம் நீங்கித் துலங்கவை தன்மைப் பாங்கில்

33. சூரெனு மவுணர் கோமான் ஆணவ மலம தாயும்
ஆருயி ரான சிங்க முகன்கன்ம மலம தாயும்
சேருறு தார கன்பல் மாயையாம் மலம தாயும்
பேருருக் கொண்டு லாவப் பொருதவை யழித்த லாலே

34. ஈனமா வேலை யுள்ளே ஈர்த்தலை யான்மா வைத்தன்
ஞானமா வேலைக் கொண்டு அரசராம் மலம ழித்தே
மானமா தேவ ராவர் மலபாசப் பிணிப்பை நீக்கி
மோனமா மோட்சம் நல்கு முப்பொரு ளுண்மை கூறும்.

35. பற்றுக ளின்றி நிற்கும் பரமனாம் முருக வேள்தன்
நற்பெரு வடிவம் காட்டி நவிலரி யுண்மை நாட்டி
வெற்றிவேற் திறத்தை நன்கே விளம்பிடு யுத்த காண்டத்
துற்றுழி யுண்மை யெல்லாம் உணர்ந்தறிந் ததன்பின்னாலே

36. சிந்துநற் குணத்தின் மேலோர் சிறைப்பட நேர்ந்திட்டாலும்
முந்துறு தொல்லை நீங்கி முருகனி னருளி னாலே
இந்திர லோக வாழ்வை ஈங்கவ ரடைவ ரென்றே
உய்ந்தறி தேவ காண்டத் துண்மைகள் நயந்து நோக்கி

37. விழைதகு சிவனை நீக்கி விதந்துரை தக்கன் யாகம்
நுழைவுறு மமர ருற்ற நீள்துய ரேது காட்டி
பழவினை வந்து சேர்ந்த பாங்குரை தட்ச காண்ட
மழையினிற் தோய்ந்தும் கூறும் மறைபொரு ளுணர்ந்து
கொண்டார்.

38. கற்றிடும்போது கூடக் கற்றிடு வோர்க ளுக்கோ
மற்றைய யாவ ருக்கோ மாணவர் யாவ ருக்கோ
உற்றிடு சந்தே கங்கள் உட்பொருட் தத்து வங்கள்
பற்றிடு மன்பி னோடு பதிலளி பான்மை கண்டே.

39. கூரிய அறிவு வந்து கூடிடப் பெற்ற தாலே
பாரினிற் குழந்தை யாயும் படிப்பினிற் பெரிய னாயும்
தாரினில் விளங்கக் கண்டு தமையனார் தியாக ராசன்
ஊரினில் உயர்த்தி வைக்கும் உன்னத நோக்கத்தோடு

40. சற்குரு இவர்தா னென்று சகமதே சாற்றி நிற்கும்
நற்குரு வான வேலா யுதமுதலி யாரின் வீட்டில்
கற்றிட வழைத்துச் சென்றே காட்டிட முகத்தில் வீசும்
அற்புத ஒளியைப் பார்த்து அகமகிழ் வடைந்து சேர்த்து

41. முற்றறி வுடைய னாக முன்புசெய் தவத்தாற் கல்வி
பெற்றிட வந்தார் தம்மேற் பிரியம தாகிப் பெற்ற
சற்குண மைந்த னான சம்பந்த முதலி யோடு
பற்றுடன் அமர்த்தி வைத்தே பாடங்கள் சொல்லலுற்றார்.

❋ (வளரும்)

## அனைத்து அறன்

சர்வதர்மமும் என்னவென்றால் அவரவரும் 'மனத்துக் கண் மாசிலன் ஆதல்' ; அதாவது தங்கள் உயிரைத் தாங்களே துளி அழுக்கில்லாமல் நிர்மலமாகச் சுத்தம்செய்து கொள்வதுதான் என்கிறார் திருவள்ளுவர். கர்மானுஷ்டானத்தால் அவரவரும் சித்த சுத்தி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்கிற சம்பிரதாயத்தைத்தான் இங்கே திருக்குறளும் சொல்கிறது. முதலில் இவன் தன்னைத்தானே சுத்தம் பண்ணிக்கொள்ள வேண்டும். இது இல்லாமல் பரோபகாரம் சமூகசேவை என்று கிளம்பினால் அது வெற்றுக் காரியம் தான். –சங்கராச்சார்ய சுவாமிகள்–

# பேணி அணிபவர்க்கெல்லாம்...

**– சைவப்புலவர் சி. கா. கமலநாதன் M. A –**

சைவசமயத்தின் மூலமாக விளங்குவது திருநீறு ஆகும் சைவப் பெருமக்களாகிய நாம் எந்த நிகழ்வையும் திருநீறு அணிந்தே தொடங்குகின்றோம். இதனை அணியாதவர்கள் சைவசமயத்தில் இருப் பதற்கு அருகதை அற்றவர்களாவர். தெய்வப் புலமை பெற்ற ஔவைப் பிராட்டியார் **"நீறில்லா நெற்றி பாழ்"** என்றார். அவர் இந்த நல்வழியைக் கூறும்போது திருமண் ணில்லாத நெற்றி பாழ் என்றோ அல்லது சந்தணம் இல்லாத நெற்றி பாழ் என்றோ கூறவில்லை. எனவே மனிதர்களுடைய நெற்றிக்கு இலட்சணத்தைத் தருவது திருநீறேயாகும். அப்பர் சுவாமிகளும் **"திருவெண்ணீறணி யாத திருவிலூரும்... அவையெல்லா அடவி காடே"** என்று குறிப்பிட்டார். கூர்ம புராணம், திருநீறு அணியாத நெற்றி யைக் கொழுத்துக, சிவாலயம் இல்லாத கிராமத்தைச் சுடுக என்று கூறுகிறது.

நாம் கோவில்களிலே கிரியைகளைச் செய்யத் தொடங்குகின்ற போதும், இல்லங்களிலே பூர்வ அபரக் கிரியைகள் செய்யும் போதும் விபூதி அணிந்தே ஆரம்பிக்க வேண்டியது பிரதானமாகும். ஒருவர் தமது பூத உடம்பைச் சுத்தம் செய்து உள்ளத்திலே இறைவனை எழுந்தருளச் செய்வதற்குத் திருநீறே இன்றியமையாதது.

திருநீற்றுக்கு வேறு பல திவ்விய பெயர்களும் உண்டு. அவையாவன

1) **விபூதி : வி** என்பது மேலானது என்றும் **பூதி** என்பது: ஐஸ்வரியம் என்றும் பொருள்படும். இங்கே ஐஸ்வரியம் என்பது செல்வங்களை மட்டுமன்றி முத்திப் பேற்றையும் குறித்து நிற்கிறது.
2) **பசிதம் :** ஆன்மாக்களுக்கு அறியாமை அழியும்படி சிவஞானமாகிய சிவதத்துவத்தை விளக்குவது.
3) **க்ஷாரம் :** உயிர்களது மலமாசுகளைக் கழுவுவது.
4) **இரட்சை** : ஆன்மாக்களைத் துன்பத்திலிருந்தும் நீக்கி இரட்சித்துக் காப்பது.
5) **பஸ்மம், பற்மம் :** ஆன்மாக்களின் பாவங்களையெல்லாம் நீறாகச் செய்வது.

இவ்வாறு பல சிறப்புக்களைக் கொண்ட விபூதியானது முன்னைய காலத்திலே செய்த சித்துக்களை இப்போது செய்வது குறைவாக உள்ளதே? என்ற கேள்வி பலரிடம் எழுகின்றது. அதாவது திருஞானசம்பந்தர் காலத்திலே கூன்பாண்டியனுடைய வெப்புநோயை நீக்கி அவைதீக நெறிகளிலிருந்து சைவத்தையும் மக்களையும் பாதுகாத்தது போன்ற எத்தனையோ அற்புதங்கள் திருநீற்றால் நடைபெற்றன. இன்று அவ்வாறான சக்தி-தெய்வீகம் விபூதிக்கு ஏன் இல்லை என்று பலரும் நினைக்கின்றார்கள். இதற்குப் பல காரணங்கள் உண்டு.

ஈழத்தின் சைவத்தமிழ் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் கடையில் வாங்கும் விபூதி அணிவதற்குத் தகாதது என்று தனது நூல்களிலே பல இடங்களில் அழுத்திக் கூறியுள்ளார். ஆனால் நாம் இன்று ஆலயங்கள் தொடக்கம் வீடு வரை எல்லா நிகழ்வுகளுக்கும் கடைகளிலிருந்தே விபூதியை வாங்குகின்றோம். இது அதன் சித்துக் குறைவதற்குக் காரணமாகும். கடைகளிலிருந்து கிடைக்கும் விபூதி உரியமுறையில் தயாரிக்கப்படுவது கிடையாது. உமிச் சாம்பல், மருதங்காய் சாம்பல், வெதுப்பகச் சாம்பல், தூய்மையற்ற நிலையில் எடுக்கப்பட்ட சாணக நீறு, மலைக்கல் அரைத்த சாம்பல் போன்றவற்றிற்கு வாசனைத் திரவியங்களைக் கலந்து விபூதி என்று சொல்லி விற்கின்றார்கள். எமது சைவசமயத்தின் ஆதாரமாகிய விபூதியிலேயே பொய்மை குடிகொள்கின்ற போது அதனை அணிந்து கொண்டு செய்கின்ற காரியங்கள் எல்லாம் பொய்த்துப் போகின்றன சித்தி தருவதில்லை. நாம் எவ்வளவோ பணம் செலவு செய்கின்ற தெய்வீகக் காரியங்கள் கூட உரிய பலனைத் தருவதில்லை. வாழ்க்கையிலும் இருளும் துன்பமும் சூழ்கின்றது. ஒளி மங்கிப் போகின்றது. எனவே முதல் நிலையில் விபூதியை முறைப்படி தயாரித்து நாம் அணிய வேண்டும். கடைகளில் வாங்குவதை நிறுத்த வேண்டும். இதைச் செய்வதற்குச் சைவப் பெருமக்கள் எல்லோரும் உறுதியெடுத்துக் கொள்ளவேண்டும்.

விபூதி தயாரிக்கும் முறைகளைப் பலநூல்கள் எடுத்துக் கூறுகின்றன. சுத்தமான சாணகத்தில் (கோமயம்) இருந்துதான் திருநீறு தயாரிக்கப்பட வேண்டும். பின்வரும் பசுக்களுடைய கோமயம் விபூதி தயாரிப்பதற்கு எடுத்தலாகாது.

1. கன்று பிரசவித்து பத்துநாள் சூதகமுடைய பசு
2. கன்று பிரசவியாத கிடாரிப்பசு
3. நோய் வாய்ப்பட்ட வியாதியுடைய பசு
4. தன் கன்றைப் பிரசவித்தபின் அது இறந்த பசு, கிழப்பசு
5. மலட்டுப்பசு
6. மலத்தையும் அழுக்குகளையும் உண்ணும் பசு

மேற்படியான பசுக்களை நீக்கி நல்ல பசுக்களிலிருந்து கோமயத்தை எடுக்கவேண்டும். கபில நிறப் பசுவினுடைய சாணகம் மிகுந்த சக்தியுடையது என்று கூறப்படுகின்றது.

கோமயத்தை எடுக்கும் முறை மூன்று வகையாகக் கூறப்பட்டுள்ளது.

அ) **சாந்திகம்-** பசு கோமயம் இடும்போது பிற்பகுதியிலே கை வைத்து எடுப்பது. இது மத்திமமாகும்.

ஆ) **காமதம்** - பூமியில் விழுந்தபின் மேலால் கிள்ளி எடுப்பது. இது அதமம்

இ) **பௌட்டிகம்** - சாணகம் பூமியில் விழ முன்பு தாமரை இலையில் ஏந்தி எடுப்பது. இது உத்தமம்

→

**விபூதியின் பெருமையை, மகத்தான சக்தியை விரிவாகக் கூறுகின்றது திருஞானசம்பந்தர் பாடிய திருநீற்றுப்பதிகம். முன்னைய காலத்திலே விபூதிக்கிருந்த தெய்வீகசக்தி இன்று இல்லாமற் போய் விட்டதா? ஏன்? விபூதியை எவ்வாறு தயாரிக்கவேண்டும் ? அதை எப்படி அணியவேண்டும்? விடைகளையும் விளக்கங்களையும் கட்டுரையிற் கண்டு பயன் கொள்க.**

## பேணி அணிபவர்க்கெல்லாம்...

இவ்வாறான முறைகளிலே பௌட்டிகம் என்ற முறையிலே கோமயத்தை எடுத்துத் தயாரிக்கும் விபூதியே அதிக சக்தி, சித்து மிக்கதாகும்.

பங்குனி மாதத்தில் அட்டமி, பௌர்ணமி, சதுர்த்தசி ஆகிய திதிகளிலே கோமயத்தை எடுத்தல் அதிக சித்தியைத் தரும். சாணகத்தை தாமரை இலையில் ஏந்தும் போது **"ஓம் சத்தியோ யாதாய நம"** என்ற மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். பின்பு அந்தக் கோமயத்திலே பால் ஐந்து பலம், தயிர் மூன்று பலம், நெய் இரண்டு பலம், கோசலம் ஒரு பலம் என்ற வீதத்தில் சேர்த்து **"ஓம் வாமதேவாய நம"** என்று கூறவேண்டும். பின்பு **"ஓம் அகோராய நம"** என்று உச்சரித்து மெல்லப் பிசைந்து உருண்டை பண்ணவேண்டும். பின் நெற்சப்பட்டைகளைத் தூய்மையான இடத்திலே பரவி அந்த சாணக உருண்டைகளை **"ஓம் தற்புருஷாய நம"** என்று உச்சரித்து அதன் மேல் வைக்கவேண்டும். பின்பு அதனை சப்பட்டையால் மூடி ஆலயங்களிலே வளர்க்கப்படும் ஓம அக்கினியைக் கொண்டு வந்து தகனம் செய்யவேண்டும். இவை எல்லாவற்றையும் ஒரே தினத்தில் செய்தல் உத்தமத்தில் உத்தமமாகும்.

சாணகம் நீறாகிய பின் **"ஓம் ஈசாநாய நம"** என்று உச்சரித்து அதனைப் பத்திரமாக எடுத்தல் வேண்டும்.

**கருநிற விபூதி - வியாதியை உண்டாக்கும்.**
**செந்நிற விபூதி - கீர்த்தியை அழிக்கும்.**
**புகை நிற விபூதி - ஆயுளைக் குறைக்கும்.**
**பொன்நிற விபூதி - வருமானத்தைக் கெடுக்கும்.**

எனவே அவற்றை நீக்கி வெண்ணிற விபூதியை அணியவேண்டும். இவ்வாறு தயாரிக்கப்படும் விபூதியே கற்பவிபூதி எனப்படும். சர்வ சித்திகளையும் தரவல்லது. இதனைவிட அநுகற்பம், உபகற்பம், அகற்பம் என்றவாறும் தயாரிக்கும் முறைகள் உண்டு. ஆனால் அவை சக்தி குறைந்தவையேயாகும்.

இவ்வாறு எடுக்கப்பட்ட விபூதியை தூய்மையான வெள்ளைத் துணியால் அரித்து சுத்தம் செய்து தூய்மையான மண்பானை அல்லது சுரைக்குடுகை ஆகியவற்றிலிட்டு முல்லை, மல்லிகை, பாதிரி போன்ற வாசனை மலர்களை அதனுள் இட்டு பட்டுத்துணியால் மூடிப் பாதுகாப்பாக தூய்மையான சுவாமி அறையில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் தூய்மையாக இருக்கின்ற காலங்களிலேயே அதனுள் இருந்து விபூதியை எடுக்க வேண்டும்.

திருநீற்றை நாம் உரியமுறையில் பூசித்து அணியாததாலும் அதன் ஆற்றல் குறைந்து போகிறது. இதனை எல்லோரும் கருத்தில் கொள்ளவேண்டும். தூய்மையான செப்பு அல்லது பித்தளைத் தட்டத்திலே விபூதியை எடுத்து அதிலே ஓம் என்ற பிரணவ மந்தி ரத்தை எழுதி விநாயகரை வணங்கி கற்பூரத்தை ஏற்ற வேண்டும். பின்பு விபூதியை மலைபோலக் குவித்து அதனைச் சிவலிங்கப் பெருமானாகவும் மனோன்மணி அம்பாளாகவும் பாவனை செய்யவேண்டும். ஓம் நமசிவாய என்ற மகாமந்திரத்தை ஓதி அதன் உச்சியிலே புஷ்பங்கள் இட்டு அர்ச்சிக்க வேண்டும். தூபதீபாரா தனைகள் செய்யவேண்டும். பூசை நிறைவுற்றதும் அந்த விபூதியை எடுத்து அணிகின்ற போது சர்வசித்திகளையும் தரும். இதனை அடியேனுடைய ஆத்மீக குரு அருட்கவி, கலாநிதி சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்கள் முறைப்படி செய்து அந்த விபூதியாலே எண்ணற்ற மக்களுடைய துன்பங்களை நீக்கியமை யாவரும் அறிந்ததேயாகும். இவ்வாறு செய்கின்றபோது முன்னைய காலத்தில் திருநீறு செய்த அத்தனை மகிமைகளையும் சித்துக்களையும் தற்காலத்திலும் செய்யும் என்பது அநுபவ உண்மையாகும்.

திருநீற்றை அணிகின்ற முறைகளை அனுசரித்து நடப்பது அதன் சக்தியைக் கூட்டும். விபூதியை சிவபெருமான் முன்பும் சிவாக்கினி, சிவாச்சாரியார் அல்லது குரு முன்பும் தரித்துக்கொள்ளக்கூடாது. அவ்வாறான இடங்களில் விபூதி அணிவதானால் முகத்தைத் திருப்பி வைத்து அணிதல்வேண்டும். சண்டாளர்கள், பாவிகள் நிற்கும் இடங்களிலும் நடந்துகொண்டிருக்கும்போதும், அணிதல்கூடாது. ஒரு கையால் வாங்கிய விபூதி, விலைக்கு கடையில் வாங்கிய விபூதி , சிவதீட்சை பெறாதவர்கள் கொடுத்த விபூதி போன்றவற்றையும் அணியக் கூடாது.

**விபூதி தரிக்கும் முறை மூன்று வகைப்படும்.**

1) **ஸ்நானம்** - விபூதியை உடல் எங்கும் பூசிக்கொள்ளுதலாகும். இதனை ஆக்னேயம், பஸ்மஸ்நானம் என வேதம கூறுகிறது. காமிக ஆகமம் "கங்கை நதிகளில் நீராடுவதைப் பார்க்கிலும் கோடி மடங்கு பயன்தருவது பஸ்மஸ்நானம்" என்று கூறுகிறது. இவ்வாறு தரிப்பதால் அது மருந்தாக அமைகிறது. எழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட நாடிகள் வலிமை பெறுகின்றன. வாதத்தால் வரும் 81 நோய்களும், பித்தத்தால் வரும் 64 நோய்களும், கபத்தால் வரும் 215 நோய்களும் நீங்கும். என உபவேதங்களில் ஒன்றான ஆயுள் வேதம் கூறுகிறது.
2) **திரிபுண்டரம்:** மூன்று குறிகள் விழத்தககதாக அணிந்து கொள்ளல் இதுவாகும். சிவதீட்சை பெற்றவர்களே இவ்வாறு அணியலாம்.
3) **உத்தூளனம்:** திருநீற்றில் நீர் சேராது நெற்றியிலே பரவிப் பூசிக்கொள்ளுதலாகும்.

விபூதியை சம்புடத்தில் அல்லது பட்டுப்பையில் இட்டு எம்மோடு எப்போதும் கூடவே வைத்துக்கொள்வது எமக்கு மிகுந்த பாதுகாப்பைத் தரும். இந்தப் பை செய்வதற்கு விதியுண்டு. எட்டு அங்குல அகலமும் 12 அங்குல உயரமும் இருக்கவேண்டும். வாய் வட்டமுடையதாகச் செய்தல்வேண்டும். இதனுள் உள்ள விபூதியை கவிழ்த்துக் கொட்டக்கூடாது. அவ்வாறு செய்தால் கொடிய நரகத்தில் வீழவேண்டிவரும்.

திருநீற்றின் வகைகள் பிரதானமாக இரண்டு கூறப்படுகிறது.

1) **வைதீக விபூதி :** வேத விதிப்படி செய்யப்படும் யாகங்களிலிருந்து நீறாக்கி எடுக்கப்படுவது. புத்தியை மட்டும் தரும். மகாரட்சை எனப்படுவதுமுண்டு.
2) **சைவ விபூதி :** இருவினை ஒப்பு. மலபரிபாகம் உற்ற சிவசத்திநிபாதர்க்கு உரியதாய் சிவாகம விதிப்படி சிவதீட்சை செய்யப்பட்ட அக்கினியில் இருந்து எடுக்கப்பட்ட விபூதி இதுவாகும். புத்தியையும் முத்தியையும் தரவல்லது.

திருநீறு தானாக விளையும் தலங்களாக இலங்கையில் கதிர்காமமும், இந்தியாவில் கோவைக்கருகில் உள்ள மருதமலை, திருக்குறுக்கை, திருநீற்றுமலை, கங்கைக்கரை, திருவருணை, வில்வகானனம், சுண்டூர் முதலிய திருத்தலங்கள் கூறப்பட்டுள்ளன. இங்கு கிடைக்கின்ற திருநீறானது ஞானம், நோய்நீக்கம், பூதப்பிசாசு நீக்கம் முதலியவைகளைச் செய்யவல்லது.

இன்றைய நிலையில் எமது துன்பங்களைப் போக்கக் கூடியது விபூதி ஒன்றுதான் என்பதை எல்லோரும் நன்கு உணரவேண்டும். தீமையை நீக்கி நன்மையைப் பெருகச் செய்யவல்லது. அவலங்களை நீக்கி அமைதியைக் கொண்டுவரச் செய்யவல்லது. பிதிர் தோஷங்களை அகற்றவல்லது. நாம் செய்கின்ற காரியங்கள் யாவும் சித்திக்கச் செய்யவல்லது. இவையெல்லாம் முறையாக நடைபெறுவதற்கு திருநீற்றை உரிய முறையில் தயாரித்து அதனைப் பேணி வணங்கி அணிய வேண்டும். இதனால் தான் திராவிடச்சிசுவானவர் **பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு** என்று மந்திரமாகக் கூறினார். ❋

# விரோதி வருட சிவராத்திரி

– பிரம்மஸ்ரீ இ. வெங்கடேச ஐயர் –

நிகழும் விரோதி வருடம் தை மாதம் 30 ஆம் தேதி (12.02.2010) வெள்ளிக்கிழமையே மஹா சிவராத்திரி விரதம் கொள்ள வேண்டும் என்று இலங்கையில் வெளிவரும் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்திலும், இந்தியாவில் வெளிவரும் சில பஞ்சாங்கங்களிலும் வெளியிடப்பட்டிருக்கின்றது. மாகமாச அபரபக்ஷ சதுர்த்தசி மஹாநிசியில் வியாபித்துள்ள தினமே மஹா சிவராத்திரிக்குரிய தினமென்று சாந்திரமானிகள் கைக்கொள்ளும் ஸ்மிருதி புராணாதி நூல்களில் மாத்திரமன்றிச் சௌரமானிகள் கைக்கொள்ளும் ஆகமங்களிலும்கூட விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகமங்களில் முதலாவதான பரார்த்த சங்கியையுடைய காமிகாகமத்தில் சிவராத்திரி பூஜா படலத்தில், 4 ஆம், 5 ஆம் சுலோகங்கள் வருமாறு :-

**ஸ்ருணுத்வம் தத்விதாநம்ஹி ஸர்வேஷாமபீ ஸம்மதம்।**

**மாகமாஸ்ய ஸிதேபக்ஷே வித்யதேயா சதுர்த்தசீ ॥**

**தத்ராத்ரீ சிவராத்ரிஸ்யாத் ஸர்வபுண்ணிய சுபாவஹா।**

**தஸ்யாமேவ சிவேபூஜா சிவலிங்கே சிவாலயே ॥**

**கேளுங்கள்!** எல்லாவிதமான புண்ணியங்களையும், சுகங்களையும் தரக்கூடிய சிவராத்திரி அன்று சிவபூஜை செய்யும் காலம் ஆனது மாக மாதத்தில் வரும் தேய்பிறை சதுர்த்தசி திதி கூடும் ராத்திரியே. சிவாலயங்களில் சிவலிங்கத்திற்கு சிவபூஜை செய்வதற்கு ஏற்ற காலம் இதுவே.

**கந்தபுராணத்தில்:**

**மாகக்ருஷ்ண சதுர்த்தஸ்யாம் ரவி வாரோ யதாபவேத்।**

**பௌமோதவா பவேத்தேவீ கர்த்தவ்யம் வ்ரதமுத்தமம்॥**

**இதன் பொருள்:** மாக மாச கிருஷ்ண பக்ஷத்தில் வரும் சதுர்த்தசி ஞாயிற்றுக்கிழமையிலாவது செவ்வாய்க் கிழமையிலாவது வருமேயானால் அந்தச் சதுர்த்தசி உத்தமமானதாகும். (இங்கு பார்வதிதேவி சிவபெருமனை நினைத்து தவம் இருந்தபோது பார்வதிதேவிக்கு சிவராத்திரி விரதம் எப்போது என்றும் அது ஞாயிற்றுக் கிழமை அல்லது செவ்வாய்க்கிழமைகளில் சேர்ந்து வந்தால் மிகவும் உத்தமம் என்றும் உபதேசிக்கப்பட்டது.

* எப்படி சனிக்கிழமைகளில் வரும் சனிப்பிரதோஷமானது சிவபெருமானுக்கு விசேஷமோ அதேபோன்று சிவராத்திரி ஞாயிற்றுக்கிழமையோ செவ்வாய்க் கிழமையோ வந்தால் சிவபூஜைக்கு மிகவும் உத்தமோத்தமமாகும்.

**குமாரதந்திரத்தில்:**

**மாகபூஜாவிதி: ப்ரோக்தம் சிவராத்திரிவிதிம் ச்ருணு॥**

**தந்மாஸே க்ருஷ்ணபக்ஷேது வித்யதேயா சதுர்த்தசீ।**

**தத்ராத்ரீ சிவராத்திரிஸ்யாத் ஸர்வபுண்ய சுபாவஹா॥**

**கேளுங்கள்!** எல்லாவிதமான புண்ணியங்களை அளிக்கக் கூடிய சிவராத்திரி விதியானது, அந்த மாதத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் எப்போது சதுர்த்தசித் திதி தோன்றுகின்றதோ அந்த இராத்திரி சிவராத்திரியாக இருக்கின்றது: (இதில் மாதம் குறிப்பிடவில்லை. காரணம் **மாகபூஜாவிதி** என்று தலைப்பு தந்தபடியால் அந்தமாதம் என்று குறிப்பிடுகின்றார்.)

இவ்வாறே, மாக மாசத்திலேயே சிவராத்திரி கொள்ளப்பட வேண்டுமென்று பல சாஸ்திரங்களிலும் விதிக்கப்பட்டிருக்கிறது.

“மாகமாசம்” என்றால் எது? என்பதை ஆராய்வோம். மகரசங்கிராந்திக்குப் பின் முடிந்த அமாவாசை கழித்த பிரதமை முதலாக, கும்ப சங்கிராந்திக்குப் பின் : முடிந்த அமாவாசை இறுதியாகவுள்ள காலமே மாகமாசம் எனப்படும். மாக மாச லக்ஷணத்திற்கு கும்ப சங்கிராந்தி இடையில் இருக்கவேண்டும். கும்ப சங்கிராந்திக்கு முன்னும் பின்னுமாகவே எப்போதும் மாகமாசம் வரும். மாகமாசமென்றால் அது தனியே மாகமாசமாகவோ, அல்லது தனியே கும்ப மாசமாகவோ ஒருபோதும் வரமாட்டாது. ஆகவே “மாகமாசமென்றால் கும்பமாசந்தான்” என்று கூறுவது கணிதவிதியறியாதாரின் விளங்காக் கூற்றாம், மாகமாசமே கும்பமாசமென்றால் கும்பமாசமென்பது எப்போதும் மாக மாசத்தையே குறிக்குமா? பாற்குன மாசத்தின் ஓர் பகுதி எப்போதும் கும்ப மாசத்திலேயே வருமன்றோ? மாக பாற்குன மிரண்டும் வரும் மாசத்தை மாகமாசந்தான் என்று சொல்லலாமா?

(விரோதி வருடத்தில் வரும் (2009 - 2010) மாக மாதமானது தை மாதம் 3 ஆம் திகதி (16.01.2010) சனிக்கிழமை ஆரம்பமாகி மாசி மாதம் 2 ஆம் திகதி (14.02.2010) ஞாயிற்றுக்கிழமை முடிவடைகிறது: அமாவாசைக்கு முதற்தினம் வரும் சதுர்த்தசியே மஹா சிவராத்திரி என்னும் விதிப்படி, விரோதி வருடம் தை மாதம் 30 ஆம் திகதி (12.02.2010) வெள்ளிக் கிழமையே மஹா சிவராத்திரி விரதமாகும்.)

சாந்திரமாசங்களைச் சௌரமாசத்தால் கொள்ளுவது ஒவ்வாது என்பதற்கு இன்னும் சில உதாரணங்களைக் காட்டுவோம். →

**அடுத்த ஆண்டில் – 2010 இல் மகா சிவராத்திரி விரததினம் சம்பந்தமான இருவேறு கணிப்புகள் வெளிவந்துள்ளன. விரோதி வருடம் தை மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமையே (12.02.2010) சிவராத்திரி என்பதற்குரிய காரணங்களை விளக்குகின்றார் வாக்கிய பஞ்சாங்க கணிதர் கொக்குவில் பிரம்மஸ்ரீ இ. வெங்கடேசஐயர்.**

# விரோதி வருட சிவராத்திரி

பாத்திரபதமாச பூர்வபக்ஷ சதுர்த்தி விநாயகசதுர்த்தி விரதம். இது பெரும்பாலும் ஆவணியில் வருவதால் ஆவணிச் சதுர்த்தியென்றும் கூறப்படும். ஆயினும் ஆவணிக் கடைசிப் பகுதியில் அமாவாசை வரும்போது பூர்வ சதுர்த்தி புரட்டாதியிலும் வருமாதலால், விநாயக சதுர்த்தி விரதம் சில வருடங்களில் மாத்திரம் புரட்டாதியிலும் வரும். சாந்திர பாத்திரபதமென்பது புரட்டாதியென்ற சௌரமாசமேயாகுமென்றால் பாத்திரபத சுக்கில சதுர்த்தி எப்போதும் புரட்டாதியிலேயே வரவேண்டுமே ஆவணியில் பெரும்பான்மை வருதல் தவறாகுமே! அப்படியிருக்கவும், பாத்திரபத சுக்கில சதுர்த்தியைப் புரட்டாதிச் சதுர்த்தியென்று அழைக்காமல் ஆவணிச் சதுர்த்தியென்று அழைப்பதன் காரணம் பெரும்பான்மை வழக்கம் பற்றி வந்ததேயாம், மாகமென்றால் மாசி ஆகாதவாறு, பாத்திரபதமும் புரட்டாதி ஆகமாட்டாது, ஆவணி புரட்டாதி இரண்டிலுமே பாத்திரபதம் வரும்.

இவ்வாறே ஆஸ்வீஜ சுக்கில பிரதமை முதல் நவமி இறுதியாக அனுஷ்டிக்கப்படும் நவராத்திரி விரதம் பல வருஷங்களில் புரட்டாதியிலும், மற்றும் பல வருஷங்களில் புரட்டாதியிலும் ஐப்பசியிலும் பங்காகவும், அரிதாக ஐப்பசியிலும் கொள்ளப்படுகின்றது.

கிருத்திகா சுக்கில பிரதமை முதல் ஷஷ்டி இறுதியாக அனுஷ்டிக்கப்படும் ஸ்கந்தஷஷ்டி விரதமும், பல வருஷங்களில் ஐப்பசியிலும், மற்றும் பல வருஷங்களில் ஐப்பசியிலும் கார்த்திகையிலும் பங்காகவும், அரிதாகக் கார்த்திகையிலும் கொள்ளப்படுகின்றது. இவ்விரு விரதங்களின் நியதிகளைக் கவனிக்குமிடத்து, ஆஸ்வீஜ மாசமென்றால் ஐப்பசியென்றும், கிருத்திகா மாசமென்றால் கார்த்திகையென்றும் மாசப்பெயர் ஒற்றுமை பற்றிச் சௌர மாசப்பெயரால் கூறப்படவேண்டிய நியாயம் இருக்கவும், பெரும்பான்மை ஏற்படும் நியதிபற்றி புரட்டாதி நவராத்திரி என்றும், ஐப்பசி ஸ்கந்தஷஷ்டி என்றும் உபசாரமாக வழங்கப்படுகின்றமை காண்க. இதனாலும் சாந்திரமாதப் பெயர்கள் அதே பெயரையுடைய சௌர மாசங்களைத்தான் குறிக்கும் என்பது எவ்வளவு அபத்தமென்று விளங்குகின்றது.

இன்னும், எப்போதும் ஆஸ்வீஜம் என்ற சாந்திர மாசத்திலேயே கொள்ளப்படும் நவராத்திரியை சில வருடங்களில் புரட்டாதியிலும் ஐப்பசியிலுமாக இரு மாதங்களில் பங்கிட்டு அனுஷ்டிக்கவேண்டியிருத்தலாலும், எப்போதும் கிருத்திகாமாசத்திலேயே கொள்ளப்படும் ஸ்கந்தஷஷ்டியை சில வருடங்களில் ஐப்பசியிலும் கார்த்திகையிலுமாக இருமாதங்களில் பங்கிட்டு அனுஷ்டிக்க வேண்டியிருத்தலாலும், சௌரமானத்தால் இவ்விரதங்களை **ஒரேமாசத்தில் அனுஷ்டிக்க முடியாதென்பதும்** விளங்குகின்றது. இக்காரணம் பற்றியே நவராத்திரி ஸ்கந்தஷஷ்டி விரதங்களைச் சாந்திரமாசப்படி அனுஷ்டிக்கலாமென்று சௌரமானிகளும் ஒப்புக்கொண்டுள்ளனர், சௌரமானப்படிதான் அனுஷ்டிக்க வேண்டுமென்றால் **ஆரம்பம் முதல் முடிவு வரை** இவ்விரதங்களை ஒரே சௌர மாசத்தில் எப்படி அனுஷ்டிக்க இயலும்? சாந்திரமாசமொன்றினாலேயே இவ்விரதங்களை ஒழுங்காக அனுஷ்டிக்கலாமன்றோ?

சாந்திரமாசங்கள் ஒவ்வொன்றும் இரண்டு சௌரமாசங்களில் பங்கு பெற்றிருப்பதினால் சாந்திரமாசத்தின் முற்பகுதியான பூர்வ பக்ஷத்தில் வரும் விரதங்கள் பெரும்பாலும் முந்திய சௌரமானத்திலேயே வரும். சாந்திர மாசப் பிற்பகுதியான அபரபக்ஷத்தில் வரும் (சிவராத்திரியைப் போன்ற) விரதங்கள் பெரும்பாலும் பிந்திய மாசங்களிலேயே வரும். இப்படிப் பெரும்பான்மை பற்றி இன்ன இன்ன சௌரமாசங்களில் வருமென்று உபசாரமாகக் கூறப்பட்ட நியதிகளை எப்போதும் அவ்வச் சௌரமாசங்களிலேயே வருமென்று கொள்ளக்கூடாது.

ஓர் உதாரணத்துக்காக, மாசிச் சங்கிரமம் மாசி மாதம் 1 தேதி 17 - 25 என்று வந்தால் பங்குனிச் சங்கிரமம் பங்குனி மாதம் 1 தேதி 5- 49 என வரும், அப்படி வரும்போது மாசி மாதம் அமாவாசை 31-14 என்று வந்தால், மாசிச் சங்கிரமத்துக்குப் பின் 1தேதி அமாவாசை முடிய ஒரு சாந்திரமாசம் ஆரம்பிக்கும். பின்பு பங்குனி மாதம் 1தேதி 5-08 என்றிருக்க சங்கிரமம் 5-49 என வருவதால் பங்குனி மாச சங்கிரமத்துக்கு முன் அமாவாசை முடிந்து அடுத்த சாந்திர மாசம் ஆரம்பமாகிவிடும். ஆகவே மாசியிலேயே இரண்டு அமாவாசை முடிவதால் மாசிமாசம் அதிக பாற் குணமாசமாகிவிடும். அப்படி வந்தால் அதிகமாசத்தில் சிவராத்திரி கொள்ளாமல் பங்குனி மாதம் கடைசியிலா மஹா சிவராத்திரி கொள்ளுவது? அல்லது சிவராத்திரிக்கு மட்டும் அதிக மாச தோசம் இல்லையென்று விதி இருக்கிறதா? மாசியில் ஒருபோதும் அதிக மாசம் வரமாட்டாதா?

ஆகமங்களில் சௌரமாசங்களைச் **சந்தேகத் துக்கிடமின்றிக்** குறிக்கும்போது மேடமாதம், இடப மாதம் முதலிய இராசிப்பெயர்களாலேயே குறிக்கப்பட்டிருக்கின்றது. காமிகம் காரணம் முதலிய ஆகமங்கள் மாசி மாதத்தையே குறிப்பிடவேண்டுமென்று விரும்பியிருந்தால் மாகமாதமென்று குறிக்காது கும்பமாசமென்றே குறித்திருக்கலாம். அப்படிச் சொல்லியிருந்தால் சாந்திர மாசியா சௌரமாசியா என்ற சந்தேகம் இருக்க வேண்டியதில்லை

சூரியன் கும்பராசியிற் செல்லும் (சௌர) மாதமே மாகமாதமெனவும் கும்பமாதமெனவும் பெயர்பெறுமென்றால், சாந்திரமாகமாசத்துக்குத்தான் தனிப்பெயர் என்னவோ? அதனைச் "சாந்திரமாகம்" என்றுதான் அழைக்கவேண்டுமா? மாகமென்ற பெயர் சாந்திரமாசத்தைக் குறிக்காதா? அல்லது, சந்திர மாதமென்ற மாதமே எங்கள் அகராதியில் இல்லை; எங்கும் எப்போதும் சௌரமாதமென்றே உளது என்ற "தனி" எண்ணமா? இப்படியான அபத்தமான விதிகளை ஆக்குபவர்கள் தானா அறிவாளிகள்! இவர்கள்தானா உலகை உய்விக்கும் வழிகாட்டிகள்!

→

## விரோதி வருட சிவராத்திரி

கண்டனூர் சிவஸ்ரீ அரு. இராமநாதக்குருக்கள் அவர்கள் எழுதிய சிவராத்திரி நிர்ணயத்தில்: சித்தாக மத்திலே....சிவராத்திரியில் சௌரமாசத்தினாலே ஸ்திர லிங் கார்ச்சனஞ் செய்யவேண்டும் ; **கிருகத்தில் ஆத்மார்த்த லிங்கபூசையை சாந்திரமானப்படி செய்ய வேண்டும்.** இல்லையானால், இரண்டையும் சௌரமானப படியே **செய்யலாம்.** ஏனென்றால், சௌர பட்சம் பிரசஸ்தம், சாந்திரபட்சம் அசஸ்தம், சௌரம் ஸ்திரம், சாந்திரம் அஸ்திரம். இது முதலான காரணத்தால் **சௌரமே ஆன்மார்த்த....** பரார்த்த **லிங்கங்களுக்குச் சிலாக்கியமாக விருக்கின்றது** என்று கூறியிருக்கின்றார்.

ஈண்டு, "ஆத்மார்த்தலிங்க பூசையைச் **சாந்திரமானப் படி செய்யவேண்டும்'** என்று முதற் கட்டளையிட்டு, பின் இல்லையானால், **சௌரமானப்படியே செய்யலாம்** என்று ஒருவாறு ஆமோதித்து:, பின் **சௌரமே ஆன்மார்த்த.... லிங்கத்திற்குச் சிலாக்கியமாக விருக்கின்றது** என்று மாற் றுக் கட்டளையிடுகிறது சித்தாகமம். அப்படியானால், "கிருகத்தில் ஆத்மார்த்தலிங்க பூசையைச் சாந்திர மானப்படி செய்யவேண்டும்" என்று முதற் கட்டளை யிட்டதின் நோக்கந்தான் என்னவோ? இதுதானா வியாக்கியானஞ் செய்யும் முறை?

சைவமக்களுக்குக் காமிகம் பிரசித்தமான மூலா கமம். இதில் சிவராத்திரிவிரதம் மாககிருஷ்ண சதுர்த்தசி யில் கொள்ளத்தக்கது என்றே கூறப்பட்டிருக்கின்றது. இதனைக் கூறிய அதே படலத்தில் இதனைச் சௌர மாசத்திலேயே செய்தல் வேண்டுமென்று விளக்காது விட்டு, உத்தரகாரணாகமத்தில், சாந்திரமாதத்தை நீக்கவேண்டும். சௌரமாதத்திலேயே சிவராத்திரியைச் செய்யவேண்டுமென்று கூறுவானேன்? மிகப்பெரிய காமி காகமத்திலே இதனைச் சேர்த்து விளக்க இடம் போதாது போயிற்றா? அல்லது அக்காலத்தில் சாந்திரமான அனுட் டிப்பே இருக்கவில்லையா?

சிவராத்திரியைச் சாந்திரமானத்தினால் கொள்ளக் கூடாது என்றபோதே அதற்கு முன்பும் சிவராத்திரி சாந்திரமானத்தினாற்றான் கொள்ளப்பட்டு வந்தது என்பதை ஒப்புக்கொண்டதாகும். இதனால் சாந்திரமான அனுட்டிப்புத்தான் முதன்முதலாக எங்கும் இருந்து வந்த தாகவும் சௌரமானத்தை அனுட்டிப்பவர்கள் தமதுபுதிய கொள்கைக்கு ஏற்பச் சாந்திரமாச விரதங்களைச் சௌர மாசத்தால் நிர்ணயிக்க முற்பட்டபோதுதான் வித்தியா சங்கள் ஏற்பட்டதாகவும் தெரிகின்றது.

சாந்திரமாச அனுட்டிப்பும் சௌரமாச அனுட்டிப்பும் பெரும்பான்மை ஒரே சௌரமாசத்திற்றான் வரும். சிற்சில காலங்களில் மாத்திரம் வெவ்வேறு மாசங்களிலும் வரும். அப்படி இருவேறு விதமாக வராமல் எப்போதும் ஒரே காலத்திலேயே சைவர்களின் விரதானுஷ்டானங்கள் வர வேண்டுமாயின் அதற்குப் பொருத்தமான வகையில் விரத நிர்ணயஞ் செய்துகொண்டால் சாந்திரமானிகளும் ஒரே தினத்திலேயே சிவராத்திரி முதலிய விரதங்களை அனுஷ்டிக்க ஏதுவாகும். அதுதான் எவ்வாறோவெனின், உதாரணமாக : சிவராத்திரி நிர்ணயத்தில் சாந்திரமானிக ளுக்குரியமாகமாசமும் சௌரமானிகளுக்குரிய (கும்ப) மாசிமாசமும் தவறாது தொடர்புற்றிருக்குமாறு நிர்ண யிப்பதாகும்.

இன்னும் விளக்கமாகக் கூறுமிடத்து, "தை அமாவாசை கழித்து ஆரம்பமாகும் மாகமாசகிருஷ்ண, சதுர்த்தசி மகாநிசி வியாபகதினம் மஹா சிவராத்திரி என்று சாந்திரமானிகளும், "மாசி மாதத்தில் முதலில் முடியும் அமாவாசைக்கு முந்திய மகாநிசி வியாபக முள்ள அபரசதுர்த்தசிதான் மஹாசிவராத்திரி" என்று சௌரமானிகளும் வைத்துக்கொண்டால், இருசாராரும் ஒரே தினத்திலேயே சிவராத்திரிக்கு விரதம் கொள்ளத் தக்கதாகும். சிவராத்திரி அரிதாக மாசியில் வரா விட்டாலும், சிவராத்திரிக்குரிய கிருஷ்ணபக்ஷத்தின் முடி பான அமாந்தம் மாசியிலேயே கட்டாயமாக முடிய வேண்டியிருப்பதால், சிவராத்திரிக்கும் மாசிமாத சம்பந் தம் உண்டாகிறது. சிவராத்திரியை அடுத்துவரும் அமா வாசை எப்போதும் மாசியில் முடிபுறும் அமாவாசையே யாகும்.மாசியில் (அதிகமாசம்வந்து) இரண்டு அமாவாசை முடிந்தால் முந்திய அமாவாசைக்கு முன்பே சிவராத்திரி அனுட்டிக்கற்பாலது. அப்பொழுது சிவராத்திரிக்கு அதிக மாசதோஷம் இருக்காது.

இப்படிச் சாந்திரமானிகளும் சௌரமானிகளும் உண்மைக்காரணத்தை உற்றுநோக்கி ஒரே தினத்தில் இவ்விரதத்தை அனுட்டிக்காமல், காலத்துக்குக்காலம் வெவ்வேறு மாதங்களில் அனுட்டித்துவருதல் பிறசமயிகளுக்கு நகைப்புக்கிடமும் சைவசமயிகளுக்கு நம்பிக்கைக்குறைவுக்கு இடமுமாகும். **இவ்வருடம் சிவராத் திரி தை 30 ஆம் திகதியே அனுட்டிக்கவேண்டுமென்று சைவப்பெருமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.** ❋

## அஞ்ஞானம் அகலும்

**உலகத்தில் உள்ள தாய் நம்முடைய பசியைத் தீர்த்து விடுவாள். தப்பு பண்ணினால் "அதைப் பண்ணாதே அப்பா, இதைப் பண்ணாதே அப்பா' என்று நல்லது சொல்வாள், தப்புப் பண்ணாமல் இருக்கும் அறிவைத் தரமாட்டாள்.**
**ஆனால் ஞானம் என்கிற பாலைக் கொடுத்து நம்முடைய அஞ்ஞானத்தை நிவர்த்தி செய்கிறவள் ஜகன் மாதா தான். அம்பாளுடைய கிருபையினால்தான் நமக்கு அஞ்ஞானம் நிவர்த்தியாகும். அவளையே தியானம் பண்ணினால் அஞ்ஞானம் போகும்.**

**– காஞ்சி முனிவர் –**



# மாணவர் பகுதி



email: exame @ hinduorgan. com

**மாணவச் செல்வங்களே!**

வணக்கம்.

" **மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்**
**ஆகுல நீர பிற."**

**– திருக்குறள்: 34**

மனதில் குற்றம் இல்லாமல் இருப்பதே உண்மையான அறம் ஆகும். மன மாசோடு செய்யப்படும் அறச் செயல்கள் யாவும் வெறும் ஆரவாரச் செயல்களே அன்றி உண்மையான அறச்செயல்கள் ஆகா என்பது வள்ளுவரின் கருத்தாகும். பொறாமை, வஞ்சகம், பழிக்குப்பழி செய்யும் எண்ணம், பகைமை, பேராசை, வெறுப்பு, கோபம் போன்றவற்றிற்கு உங்களுடைய மனதில் இடம்கொடாதீர்கள். இவைகள் இல்லாவிட்டால் நீங்கள் என்றுமே நல்லவர்களாக இருப்பீர்கள்; மற்றவர்களுக்கு நன்மை செய்வீர்கள்.

சென்ற இதழில் அறிவித்ததற்கு அமைய "மாணவர் – சமய அறிவுப் போட்டி " க்குரிய வினாக்களைத் தருகின்றோம்.

**இந்துசாதனம்,**
**கல்லூரி வீதி, நீராவியடி.**
**யாழ்ப்பாணம்.** **- குருநாதன்**

## சைவசமய அறிவை வளர்ப்போம்

### தொகுத்தளிப்பவர்: இரா. செல்வவடிவேல்

## வினாக்கள்

1. **விநாயகரின் பெண் உருவம் (விநாயகி) காணப்படும் இடங்களைத் தருக.**

2. **ஆற்று மண்ணால் லிங்கம் அமைத்து ஆவின் பாலால் அபிஷேகம் செய்து தினமும் சிவபூசை செய்து முத்தியடைந்த நாயனார் யார்?**

3. **திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் முதன் முதலிற் பாடிய தேவாரத்தை வரிக்கிரமமாக எழுதுக.**

4. **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுடைய தாய் தந்தை பெயர்களை எழுதுக.**

5. **வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலின் பரிவாரக் கோவில்கள் எவை?**

## நீங்கள் செய்ய வேண்டியவை.

*அ) வெள்ளைத் தாளிலே ஒவ்வொரு கேள்வியையும் அதற்குரிய பதிலையும் எழுதுக.*

*ஆ) கேள்வியும் பதிலும் உங்கள் சொந்தக் கையெழுத்திலேயே எழுதப்பட வேண்டும்.*

*இ) விடயங்களின் முடிவில் உங்கள் பெயர், முகவரி, படிக்கும் வகுப்பு, பாடசாலை ஆகியவற்றை எழுதுக.*

*ஈ) விடைத்தாளில் உங்கள் கையொப்பமும், உங்கள் வகுப்பாசிரியர் / பாடசாலை அதிபர் கையொப்பமும் இடம்பெற வேண்டும்.*

*உ) விடைகளைத் தபாலுறையுள் வைத்து*
**'மாணவர் சமய அறிவுப் போட்டி: 1,**
**'இந்து சாதனம்',**
**66, கல்லூரி வீதி,**
**நீராவியடி,**
**யாழ்ப்பாணம்.**
*என்ற முகவரிக்கு 01.06.2009 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புக.*

### பரிசு விபரம்

சரியான விடைகளை எழுதி அனுப்பியோருள், குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூவருக்குப் பரிசுகள் வழங்கப்பெறும்.

| | | |
|---|---|---|
| **முதலாம் பரிசு** | ரூ | 100/= |
| **இரண்டாம் பரிசு** | ரூ | 50/= |
| **மூன்றாம் பரிசு** | ரூ | 25/= |

பரிசுபெறுவோரின் விபரங்கள் **'இந்து சாதனம்'** ஆனி இதழில் வெளியிடப்பெறும்.

**– குருநாதன்**

❋ (வளரும்)

# சைவ சித்தாந்தம்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ள சமயம் சைவம். சிவவழிபாடு சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தொடர்ந்து வருகின்றது.

பௌத்தம் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் சைவசமயமே இங்கு நிலவியது.

சைவசமயத்தின் கொள்கை விளக்கமாக இருப்பது சைவ சித்தாந்தம். அது அறிவுசார் தத்துவமென உலக அறிஞர்களாற் போற்றப் பெற்றுள்ளது.

தமிழ் மக்களின் மிகச் சிறந்த சமயத் தத்துவமாகவும் அது விளங்குகின்றது.

இத்தகைய சிறப்பும் பெருமையும் மிக்க சைவசித்தாந்தத்தை சைவத்தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இலகுவில் விளங்கிக் கொள்வதற்கும், அந்த உண்மைகளின் அடிப்படையில் தம் வாழ்க்கையை அமைத்து ஈடேறுவதற்கும் உதவும் வகையில் வினா – விடை உருவில் அமைந்த இந்தத் தொடரை ஆரம்பிக்கின்றோம்.

மலேஷியாவில் உள்ள 'திருக்கைலாய குரு பரம்பரை தினம்' – சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் – அறங்காப்பு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. பே. குலவீரசிங்கம் முனைவர் ஆ. ஆனந்தராசன் ஆகியோரின் அனுசரணையுடன் இத்தொடர் இடம்பெறுகின்றது.

## தோற்றுவாய்

### - சமயங்கள் -

**1. சமயம் என்பது யாது?**

இறைவன், உயர்ந்தோர் வாயிலாக, மக்கள் கைக்கொள்ளுதற்கு உரிய குறிக்கோளையும், அதனை அடைவதற்குப் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளையும் வகுத்து உணர்த்தியுள்ளான். இவ்வாறு இறைவனால் அவ்வக் கால இடங்களுக்குப் பொருந்துமாறு அறிவிக்கப்பெற்ற நெறிகளே சமயம் ஆகும்.

**2. எல்லாச் சமயங்களும் இறைவனால் உணர்த்தப் பெற்றவை எனில், அவை வேறு வேறு வகையாய் இருத்தற்குக் காரணம் என்ன?**

கல்விச்சாலையில் மாணவர்களின் தகுதிக்கும் விருப்பத்திற்கும் தக்கபடி வேறு வேறு பாடங்களும் வகுப்புகளும் அமைந்துள்ளன. அதுபோல, உயிர்கள் பல்வேறு பக்குவ நிலைகளை உடையனவாதலின், அவரவர் தகுதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப வேறு வேறு நெறிகள் இறைவனால் உணர்த்தப் பெற்றன.

**3. சமயங்கள் எவ்வகையில் வேறுபடுகின்றன? எவ்வகையில் ஒன்றுபடுகின்றன?**

சமயங்கள் தம் தம் சிறப்புக் கொள்கைகளில் வேறுபாடு உடையன. அதாவது அடிப்படைக் கொள்கைகள் , நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், அவற்றில் பின்பற்றும் மந்திரங்கள், கிரியைகள், முதலியவற்றில் தனித்தனி அமைப்பும் போக்கும் உடையன.

ஆயினும் பொதுக்கொள்கைகளில் இவை பெரிதும் ஒற்றுமையுடையன. கொல்லாமை, வாய்மை, இரக்கம், எவ்வுயிர்க்கும் அன்பாயிருத்தல், மனம், மொழி, மெய்களைக் கட்டுப்பாட்டில் வைத்தல் போன்ற நல்லொழுக்கங்களை எல்லாச் சமயங்களும் வலியுறுத்துகின்றன.

### சைவசமயம்

**4. சைவசமயத்தின் சிறப்புகளாகக் குறிக்கத் தகுவன யாவை?**

1. சைவ சமயம் தனக்கே உரிய சிறப்புக்கொள்கைகளைக் கைவிடாமலே, எல்லா நெறியும் இறைவனால் வகுக்கப் பெற்றவை என்னும் உண்மைகளையும் ஏற்றுப் போற்றும் சமயப் பொது நோக்கு உடையது.

2. இந்நெறி வெறும் சமயமாக மட்டும் அமையாமல், அளவை அடிப்படையை உடைய தத்துவமாகவும் உள்ளது. எனவே, சமயம், தத்துவம் என்னும் இருவகை நோக்கில், சைவசித்தாந்தம் என்றும், சித்தாந்த சைவம் என்றும் வழங்கப்பெறுகின்றது. சைவ சித்தாந்தம் என்ற பெயர் இந்நெறிக்கே உரிய தத்துவக் கொள்கையைக் குறிக்கும். சித்தாந்த சைவம் என்ற பெயர் அத்தத்துவக் கொள்கையின் வழி ஒழுகும் சமயத்தைக் குறிக்கும்.

3. உண்மைகளை வெறும் நம்பிக்கைக்கு உரியதாக மட்டும் கூறாமல், ஆய்ந்து காணும் அறிவுக்குப் பொருத்தமான முறையில் அவற்றைக் காட்டி நிறுவுவது இச்சமயம்.

4. பிறப்பு எய்துதலைச் சிவநெறி எக்காரணம் பற்றியும் கடவுளுக்குக் கூறுதல் இல்லை. கடவுளைப் பிறப்பில் பெருமான் எனப் போற்றுவது சைவ சமயம் ஒன்றேயாம்.

5. கடவுளை அணுகும் முறையில் அவரவர் அறிவு நிலைக்கும், அன்புநிலைக்கும் தக்கபடி, பல படி வழிகளைக் கொண்டிருப்பது சைவநெறி. இன்ன வழியில் சென்றுதான் அடைய வேண்டும் என்ற கட்டாயம் இந்நெறியில் இல்லை.

இன்னவாறு பல சிறப்புக்களை உடையதாய், சமயங்களுள் மிகப் பழமையானதாய், இன்றும் உயிர்ப்பு உள்ள வாழும் சமயமாய் விளங்குவது சைவம். ❋

(வளரும்)

# சமயமும் வாழ்க்கையும்

– கலாநிதி திருமதி ஜெ. இராசநாயகம் –

மனிதன் அறிவு, ஆற்றல் போன்றவற்றுடன் மட்டு மல்லாமல், ஆன்மீக உணர்வுடனும் வாழ்கின்றான். இந்து மகன் ஒவ்வொருவனுடைய வாழ்க்கையிலும் சமயத்தின் செல்வாக்கு மேலோங்கி இருப்பதைக் காணலாம். சமய உணர்வு இல்லாத வாழ்க்கை உப்பில்லாப் பண்டம் போன்றதாகும். மனிதனுடைய மனத்தைப் பண்படுத்தி, இறையுணர்வை ஊட்டி அவனைச் செம்மையாக வாழ வைப்பது சமயமே. அமைதி, ஆனந்தம், அமரத்வம் முதலியவற்றைப் பெறுவதற்கு அவனுடைய ஆன்மீக உணர்வே உதவுகின்றது. மனதைக் கட்டுப்படுத்தவும் புலன்களை நெறிப்படுத்தவும் சமயம் வழிகாட்டுகின்றது.

சமய உணர்வும், சமய எண்ணங்களும் காலம் காலமாக மனிதனைப் பற்றியே வருகின்றன. ஆனால் மனிதனுக்கு வழங்கப்பட்ட வாழ்நாளோ மிகக் குறுகிய தாகும். இந்தச் சிறிய காலப் பகுதிக்குள் சமய அறிவை யும் அதன் தாற்பரியங்களையும் அவனால் முழுமையாக உணர்ந்து கொள்ள முடியாது. என்றாலும் நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகள் சமயத்தின் அடிப்படையிலும் நம்பிக்கையிலும் நடைபெற்று வருகின்றன.

இந்துசமயம், மக்களை ஆன்மீகப் பாதைக்கு அழைத்துச் செல்கின்ற, அப்பாதையிலே நடப்பவர்களை, தொடர்ந்தும் வழிநடத்துகின்ற ஒரு மதம் மட்டுமே என்று நினைப்பது தவறு. உலகியல் வாழ்க்கைக்கும், எப்படிச் சிறப்பாக வாழலாம் என்பதற்கும் அது வழிகாட்டி உதவுகின்றது.

இன்றைய நெருக்கடிகள், பதகளிப்புகள் நிறைந்த காலகட்டத்தில் மனிதன் ஓயாது இயந்திரமாகச் செயற் பட்டுக் கொண்டிருக்கின்றான். இந்நிலையில் ஏற்படுகின்ற மனஉளைச்சல்கள் அவனது ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கின்றன. பணம், பட்டம், பதவி, கௌரவம், அந்தஸ்து என்ற மாயைகளால் பீடிக்கப்பட்ட மனிதனை அம் மாயைகள் முற்றுமுழுதாக விழுங்கிவிடாமல் பாது காத்துக் கொள்வதற்கு சமய உணர்வுகள் மனதினுள் ஆழமாக ஊடுருவியிருத்தல் அவசியமாகும். நாளெல்லாம் இறை சிந்தனையில் இருப்பது மனிதனால் இன்றைய உலகில் முடியாத காரியமாயினும் ஒரு நாளையில் சில மணி நேரத்திலாவது மனதில் நற்சிந்தனைகளை இருத்தி இறைவனை வணங்குதல் ஒரு சமயவாதியின் கடமையாகும்.

இந்துசமயம் வாழ்க்கையில் அன்புநெறியின் மகத்து வம் பற்றிப் போதிக்கின்றது. ஒவ்வொருவரும் தம் கடமை யில் அன்பும் பற்றும் கொண்டு செயற்படுதலே முக்கிய மான விடயமாகும். தன்னை நேசிப்பவன், தன் கடமையை முக்கியமாக எண்ணி நேர்வழியில் செய்பவன். இறை வனை மனதில் இருத்துபவன் ஏனையவர்களிடம் தூய அன்புள்ளவனாக இருப்பான். நற்குணமுள்ள மனிதன் அன்பிற்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றான். சமயங்களும் கீழ்ப்படிவுத் தன்மையைப் போதிக்கின்றன. ஆரம்பத்தில் இறைவனை மனதில் இருத்தி கீழ்ப்படிந்து வணங்கும் நிலை காலகதியில் சமூகத்தில் பெரியோர்களையும், மூத்தோர்களையும் மதித்துக் கீழ்ப்படியும் தன்மையை ஏற்படுத்துகின்றது.

மனிதன் ஒருபோதும் சமூகத்தில் தனித்துவாழ முடி யாது. இருப்பிடத்தால் மட்டுமல்லாது மனதளவிலும் ஏனையவர்களை ஏற்றுக்கொண்டே வாழவேண்டும். இது தான் சமூக வாழ்க்கையின் முதற்படியாகும். இதற்காக மனிதர்கள் ஏனையவர்களுடன் ஒத்துப்போகும் குணமுள் ளவர்களாகத் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். இதன் மூலம் ஏனையவர்களை வெற்றி கொள்ளவேண்டும். இத் தகைய செயல்கள் மூலம் உலகில் நிம்மதியாக வாழ முடியும். அகந்தையுடைய மனிதன் எப்போதும் பிறருடன் ஒத்துப்போக முடியாமல் திண்டாடுகின்றான். ஏனையவர் களுக்கு உதவுவதும், அவர்களைப் புரிந்துவாழ்வதும் அதனால் ஏற்படும் மகிழ்ச்சியுடன் வாழ்வதும் வாழ்க்கை யில் எல்லோருக்கும் கிடைக்க முடியாத ஒருபெரும் பேறாகும்.

அன்பு, இரக்கம், பணிவு, கருணை, கீழ்ப்படிதல் போன்ற செயற்பாடுகளோடு ஒழுக்கமும் மனிதனை மனிதனாக வாழவைப்பதில் பெரும்பங்கு எடுத்துக் கொள் கின்றது. பூர்வீககாலக் கல்விமுறைகளை எடுத்து நோக்கும்போது கூட அங்கே ஒழுக்கச் செயற்பாடுகள் முதன்மை இடம்பிடித்துக் கொண்டன. இன்றைய கல்வி யும் ஒழுக்கத்தை வலியுறுத்துகின்றது. நம் முன்னோர்கள் இயற்கை ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டுச் சிறந்த சமூக ஒழுங் குடையவர்களாக வாழ்ந்து தம் சுய ஒழுக்கத்திலும் பண் பட்டவர்களாக விளங்கினார்கள். இதற்குப்பல பெரியோர் களின் சரித்திரம் எமக்கு உறுதுணையாகின்றது.

ஆகவே இந்துசமயமானது தனித்து வழிபாட்டோடு மட்டுமல்லாமல் ஒருவன் தன் வாழ்க்கையில் கடைப் பிடிக்க வேண்டிய பல்வேறு வகையான விழுமியங் களையும் வலியுறுத்தி வருகின்றது. மனிதர்களின் வாழ்க்கை குறிக்கப்பட்ட சில வரையொழுங்குகளுக்கு உட்பட்டு அமையவேண்டுமென்பதை உணர்த்துவதோடு, அதனை ஏற்று அதன்படி ஒழுகுபவர்களைச் சிறந்த பாதைக்கு அழைத்தும் செல்கின்றது. ❋

**ஆன்மீக வாழ்க்கைக்கு மட்டுமல்லாமல் சிறப்பான உலகியல் வாழ்க்கைக்கும் இந்துசமயம் நல்வழி காட்டுகின்றது.**

# ஓதும்போது...!

திருமுறைகளை ஓதும்போது குற்றம் வராமல் ஓதல்வேண்டும். குற்றமாவன உடற்றொழிற் குற்றம், பாடும் தொழிற்குற்றம், பண் குற்றம், எழுத்துப் பிழை, சொற்பிழை, பொருட்பிழை, ஓதும் வரிசைப் பிறழ்ச்சி என்பனவாம். வெள்ளோசையுடைமை, பேய்கத்தினாற் போலக் கத்துதல், காகத்தைப் போற் கத்துதல், ஒரு ஓசையான தன்மை நீங்கிப் பலவோசையாய் வருதல், குறைபடுங்கட்டோசை, ஒரு பண் ராகம் பாட வேறொரு பண்ணிலே விலங்கி நின்று இரட்டல், ஒதுக்கிப் பாடுதல், நாசியாற் பாடுதல், வாயைக் குகைபோலத் திறத்தல், வாய் கோணுதல், அழுமுகங் காட்டல், கண்கள் ஆடுதல், தலை நடுங்குதல், புருவமேறுதல், வயிறு குழிய மூச்சை வாங்குதல், மிடறு வீங்குதல், பற்கள் காட்டல் இவையே பாடற்றொழிலினும் உடற்றொழிலினும் வருங்குற்றங் களாம். தக்கேசிப் பண்ணாகப் பாடவேண்டியதைக் கொல்லிப் பண்ணிற் பாடுவதும் தக்கேசிப் பண்ணினும் இரண்டாங் கட்டளையாற் பாடவேண்டியதை முதலாங் கட்டளையாற் பாடுதலும் பண் குற்றமாம். எழுத்துக்கள் வழுவப் பாடலும் சொற்கள் வழுவப் பாடுதலும், பொருள்கள் திரிபுறவோதலும் எழுத்துக்குற்றம், சொற்குற்றம், பொருள் குற்றங்களாம். துவட்டா என்பவன் எழுத்தொலி பிறழவுச் சரித்து யாகம் புரிந்தமையால் இந்திரனாற் தலையறுப் புண்டான். இந்திரன் பிரமகத்தியால் வருந்தினான். அன்னதே போல இக்குற்றங்கள் நிகழுமாயின் ஓதுவோர் ஓதுவித்தோர் கேட்டோர் யாவர்க்கும் பெருந்துன்பங்கள் நேரிடுமென்றுணர்க.

– **'திருமுறைப் பெருமை'**

**நூலில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர்.** ❋

# ஒரு வேண்டுகோள்

**சைவபரிபாலன சபையின் நூலகத்தில் இருந்த பல நூல்கள் இடப்பெயர்வுக் காலத்தில் காணாமற் போய்விட்டன. சபையினால் வெளியிடப்பெற்ற வெள்ளிவிழா மலர், பொன்விழா மலர், வைரவிழா மலர்களும், இந்து சாதனம் மலர்களும் இவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும். இம்மலர்களை வைத் திருக்கும் சைவ அன்பர்களை அவற்றை எமது நூலகத்திற்குத் தந்துதவுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.**

**சபாபதிநாவலர், அம்பலவாணநாவலர் ஆகியோரின் நூல்களைத் திருவாவடுதுறை ஆதீனம் பதிப்பித்து வெளியிடத் திட்டமிட்டுள்ளது. இவர்களின் நூல்களை வைத்திருக்கும் அன்பர்களும், இவர்களால் வெளியிடப்பட்ட நூல்களின் பட்டியலை வைத்திருக்கும் அன்பர்களும் அவற்றைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

**தரப்படும் நூல்களையும், மலர்களையும் பிரதி எடுத்த** (Photo copy) **பின்னர் பாதிப்பு எதுவுமின்றி உரியவர்களிடம் கையளிப்போம் என்று உறுதி கூறுகின்றோம்.**

**சைவபரிபாலன சபை,**
**66, கல்லூரி வீதி,**
**நீராவியடி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இலக்கம் – 0212227678**

# சிவோகம் பாவனை

தெய்வத்தை நம்பு, முழுமனத்தோடு நம்பு ; உலகில் உனக்கினியதெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. இருக்கும்போதும் , நிற்கும்போதும், நடக்கும்போதும் கிடக்கும்போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலும் தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. நானில்லை, கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக்கொள். எவன் எதை நினைக்கின்றானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

–யோகர் சுவாமிகள்–

# அருள் ஒளி வாழ்த்துகின்றது.

**'செஞ்சொற் செல்வர்' ஆறு. திருமுருகன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் வெளியிடும் 'அருள் ஒளி' மாசி – 2009 இதழில் வெளியான ஆசிரியர் தலையங்கத்திலிருந்து சில பகுதிகளைத் தருகின்றோம்.**

நல்லைநகர் நாவலர் பெருமானின் சிந்தனையில் எழுந்த கருத்தின் விளைவே "இந்துசாதனம்" ... ஈழத்து இந்துசமயச் செய்திகளை உலகறிய வைப்பதில் தலையாய பங்களிப்பினைக் கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேல் சீராகச் செய்து வந்ததை மறக்க இயலாது. யாழ்ப்பாணத்துச் சைவ மக்களை விழிப்படையச் செய்த உன்னத ஏடாக மதிப்புப் பெற்றது. பிற மதத்தவர்கள் சைவ சமயத்தவர்களை, பிரசுரங்களால் ஏளனஞ் செய்தபோது நாகரிகமாகப் பதில் கூறி அவர்களைத் தலைகுனிய வைத்தது....கொல்லாமையை நிலை நிறுத்துவதில் இந்து சாதனம் சாதனை படைத்தது. இந்துசமயத்தின் பெயரால் ஊரெல்லாம் கல்விச்சாலைகள் எழுவதற்கு ஊக்குவித்தது. சைவ மகாநாடுகளைத் தோற்றுவிப்பதிலும் மாநாட்டுப் பேராளர்களைப் பெருமைப் படுத்துவதிலும் மாநாட்டுக் கருத்தினை மக்களிடம் சேர்த்து மறுமலர்ச்சியை உருவாக்குவதிலும் இந்து சாதனத்தின் தொடர் பங்களிப்பு எல்லையற்றது. தமிழிலும் ஆங்கிலத்திலும் பலரும் வியக்க அரிய கருத்துக்களை அற்புதமாக வெளியிட்டு எம்மைப் பெருமைப்படுத்தியது. இந்து சாதனத்தின் பிறப்பிற்காக எத்தனை எத்தனை பெரியவர்கள் தங்களை அர்ப்பணித்தனர் என்பதை வரலாறு எடுத்தியம்புகிறது. சைவபரிபாலன சபையின் மேன்மை இந்துசாதனத்தால் நிலைபெற்றதை யாரும் மறக்கமுடியாது.....சைவ பரிபாலன சபையின் இன்றைய நிர்வாகிகளே! மிக்க நன்றி "இந்துசாதனம்" எழுந்து நடமாட வைத்துள்ளீர்கள். இந்து சாதனம் மலர இமைப்பொழுதும் துணை செய்யுங்கள்... எத்தனை இந்து சஞ்சிகைகள், மலர்கள் எழுந்தாலும், இந்து சாதனமே ஈழத்து இந்துக்களின் பிரசுரக் கருவறை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். ஆதலால், எம் மண்ணில், எம் சமய வாழ்வில் மூல ஏடாக மதிக்கப்படும் இந்து சாதனம் என்றும் மலர அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக. ❃

# அற்புதத் திருப்பதிகங்கள்

இறைவனுடைய திருத்தலங்களுக்குச் சென்று அவன் திருக்கோலத்தையும் திருவருட் சிறப்பையும் பாடிப் பரவுவதைத் தம் பணியாகக் கொண்டிருந்த சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் சில சந்தர்ப்பங்களில் அடியார்களின் இடர் நீக்கும் அற்புதங்களையும் திருவருளின் துணைகொண்டு நிறைவேற்றினர்.

மக்களின் இறைநம்பிக்கை மேலும் வலுவடையவும் பக்தியுணர்ச்சி சிறந்தோங்கவும் அவர்களுடைய அற்புதச் செயல்கள் பெரிதும் உதவின.

அந்த அற்புதங்களுடன் தொடர்புடைய திருப்பதிகங்களைக் கலாபூஷணம், பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களைக் கொண்டு தொகுப்பித்து. "அற்புதத் திருப்பதிகங்கள்" என்ற நூலைக் காரைநகர் - ஈழத்துச் சிதம்பரம் மணிவாசகர் மடாலய அன்னதான சபையினர் வெளியிட்டுள்ளனர்.

கலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக்குருக்களின் ஆசியுரையுடன் கூடிய இந்த நூலில், அற்புதங்கள் சம்பந்தமான விளக்கங்களைக் கந்தமடம் சுவாமிநாத பண்டிதர், பண்டிதர் தி. பொன்னம்பலவாணர், பண்டிதர் வ. பேரின்பநாயகம் ஆகியோர் எழுதியுள்ளனர்.

அற்புதங்களின் விபரங்கள் வரலாற்றுப் பின்னணி, பாடல்களின் சிறப்புப் போன்றவற்றை நன்கு அறிந்து கொள்ளவும், பாராயணம் செய்து பயன்கொள்ளவும் இந்நூல் பெரிதும் உதவும்.

–சி. ச

## ஒரு திருத்தம்

**காசியில் கங்கைக் கரையில் ஏழு ஆண்டுகள் பயிற்சி பெற்றவர் மணிக்குருக்கள் எனச் சென்ற இதழிற் குறிப்பிடப்பட்டிருந்தது. பயிற்சி பெற்றவர் பிரம்மஸ்ரீ குருசாமி சர்மா அவர்கள் என்பதே சரி.**

## வஞ்சகர் உள்ளம்

**பாலைவனத்தில் பசும்புல்லைக் காணலாம் எங்கே?**
**சுனையருகில்!**
**கோழைகளிடத்தில் வீரத்தைக் கூடக் காணலாம்.**
**எப்போது? உரிமை பறிபோகும் போது!**
**கார்காலத்து இருளில் வெளிச்சத்தைக் கூடக் காணலாம்.**
**எப்போது? மின்னும்போது!**
**வஞ்சக மக்களின் உள்ளத்திலுள்ளதை மட்டும் எங்கும் எப்போதும் எவராலும் காண இயலாது.**

**–கி.ஆ.பெ**

**The article reminds us That Service to Humanity is Divinity:**

**மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை**

# SERVICE IS GODLY

**Prof. A. Sanmugadas, Ph. D. (Edinburgh)**

Volunteering to serve gives us a chance to pay back the debt owed to others who have helped us. All religions speak of service. Saint Thirunavu-kkarasu Swamikal (Appar) sings "என் கடன் பணிசெய்து கிடப்பதே" ("My duty is to serve"). What Appar had said in words was also put in practice totally by him. Lord Shiva acknowledged his untiring and sacred service by offering him money without tax at Tiruvilimilalai (*திருவீழி மிழலை*). There was famine in Tamilnadu. Appar and Saint Thiruganasampanthar (Sampanthar) were serving the people by offering them food at Tiruvilimilalai. Service to people is considered as service to Lord Maheswaran. God was helping Appar and Sampanthar with money. On both sides of the altar money was kept for them. For Appar the money fetched all things needed for meals for the people immediately. But for Sampanthar, he had to wait for sometime till money was authenticated. This situation clearly states Lord Shiva had recognized the service by Appar.

On another occasion, Sampanthar said that those who worship Lord Shiva who resides at the temple of Nallurpperumanam will never suffer but will serve. His Tevaram is as follows.

> 'அன்புறு சிந்தைய ராகி யடியவர்
> நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
> றின்புறு மெந்தை இணையடி ஏத்துவார்
> துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே'

Albert Schweitzer, a French physician once said: " I don't know what your destiny will be but one thing I do know: The only ones among you will be happy are those who have sought and found how to serve."

You have to remember that God is watching us those who are doing service whether we are doing with all our hearts and minds. Tirkkurripput Tondar is a classic example shown by Cekkilar in his Periyapuranam where he was subject to Lord's testing. Lord Shiva tested not only Tirukkurripput Tondar but also several others, including Ilaiyankudimaran. This clearly tells us that God is always with us whenever we indulge in volunteer service to people. He is there not just to watch us but to inspire and help us whenever we get tired or in danger. ❋

---

*Spirituality does not involve renunciation of the world. On the other hand, Spirituality is excellence in action.*

***-Dr.S. Radhakrishnan.***

*A leaf, a flower a little water, whatever is offered with an inner consciousness that is enlightened by self control will be acceptable to God.*

***-Sri Satya Sai Baba***

*Make no mistake. Without Hinduism, India has no future. Let Hinduism vanish, and what is she? A "geographical expression" of the past, a dim memory of a perished glory. Her history, her literature, her art her monuments, all have Hinduism written across them.*

***-Annie Beasant.***

# சைவபரிபாலன சபை
# தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் – 26

## இந்து சாதனம் – பட்சமொருமுறை
## Hindu Organ - வாரமொருமுறை

1899 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15 ஆம் திகதி கூடிய சபையின் நிர்வாகசபை "1899 ஆடி மாதம் தொடக்கம் இந்துசாதனப் பத்திரிகையின் ஆங்கிலக் கூறு (Hindu Organ) வாராந்தமாகவும் தமிழ்க்கூறு பட்சாந்தமாகவும் (இரு வாரத்துக்கு ஒருமுறை) பிரசுரிக்க வேண்டுமென்றும் ஆங்கிலக் கூறுக்கு பத்திரிகை ஆசிரியர்களாக திரு. அ. சபாபதி அவர்களையும், திரு. ஆ. கதிரவேலு அவர்களையும், உப பத்திராதிபராக திரு. ச. சிவகுருநாதரையும், அச்சியந்திரசாலை முகாமையாளராக திரு. பெ. கார்த்திகேயபிள்ளை அவர்களையும் நியமிக்க வேண்டுமென்றும், இந்துக் கல்லூரி அதிபருக்கு வீடும், முன்பக்கத்திற்கு மதிலும் கட்டவேண்டுமென்றும்" தீர்மானித்தது.

இந்துசாதனம் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட காலத்திற் போலவே இப்போதும் சபை அங்கத்தவர்களினதும் ஏனையோரதும் உதவியுடனும், சபை நிதியுடனும் சைவப்பிரகாச அச்சியந்திரசாலைக்கு புதிய எழுத்துக்களும் பிற உபகரணங்களும் தருவிக்கப்பட்டன. 1899 ஆம் ஆண்டு ஆடி மாதம் ஐந்தாம் நாள் முதல் Hindu Organ என்ற பெயரில் ஆங்கிலப் பத்திரிகையை வாராந்தமாகவும் ஆடி பன்னிரண்டாம் திகதி முதல் இந்து சாதனம் என்னும் பத்திரிகை பட்சாந்தமாகவும் "டெமி" அளவில் புதன்கிழமை தோறும் வெளிவரத் தொடங்கியது. இதற்கு ஏனைய சபை அங்கத்தவர்களோடு ஊக்கமாக இருந்து உழைத்தவர் திரு. சு. அருளம்பலம் ஆவர். இவர் இந்து சாதனம் பத்திரிகைக்கு பல கட்டுரைகளையும் எழுதி உபகரித்துள்ளார்.

1899 ஆம் ஆண்டு ஆடி மாதம் பன்னிரண்டாம் நாள் வெளியான முதல் இதழிலே "சைவ பரிபாலன சபை" எனத் தலைப்பிட்ட ஆசிரியர் தலையங்கத்தை திரு. அ. சபாபதி அவர்கள் எழுதியிருந்தார். அதில் இந்துக் கல்லூரியைப் பற்றியும் எழுதியிருந்தார். அதிலே சைவப் பிள்ளைகள் தங்கள் சமயத்துக்கும் ஆசாரத்துக்கும் பங்கம் விளைவிக்காது ஆங்கிலக்கல்வி கற்கத் தக்கதாக ஒரு பாடசாலையைத் தொடங்கி நடத்த வேண்டுமென்ற எண்ணம் முப்பது வருடங்களின் முன் (அதாவது 1869 ஆம் ஆண்டளவில்) ஆறுமுகநாவலர் அவர்கள் உள்ளத்திலே குடிகொண்டதால் ஓர் வித்தியாசாலையைத் தொடங்கி சில வருடகாலம் நடத்தி வந்தார்கள். அது பிற மதத்தவர் செய்த இடையூற்று மிகுதியினாலும், நம்மவர்கட்குள் இருந்த ஒற்றுமைக் குறைவினாலும் நெடுங்காலத்துக்கு இருந்து பயன்தரா விட்டாலும் அம்மகானது உள்ளத்திலிருந்த நல்லெண்ணமாகிய வித்தே இச்சபையாரைத் தூண்டி 1890 ஆம் ஆண்டு இந்துக் கல்லூரியை ஆரம்பிக்கச் செய்ததாகும் என்ற கருத்துப்பட எழுதியுள்ளார்.

### 1898 – 1899 வருடங்களில் இந்துக் கல்லூரியின் பெறுபேறுகள்

இந்துக் கல்லூரி மாணவரில் நால்வர் 1898 ஆம் ஆண்டு கல்கத்தா பிரவேச பரீட்சையில் சித்தியடைந்தனர். F.A பரீட்சையில் அறுவர் சித்தியடைந்தனர். 1899 ஆம் ஆண்டுப் பரீட்சைகளில், கல்கத்தா பிரவேச பரீட்சையில் ஐவரும், F.A. பரீட்சையில் நால்வரும் சித்தியடைந்தனர். 1898 ஆம் ஆண்டு முடிவில் இந்துக் கல்லூரியில் மாணவர் எண்ணிக்கை 357. 1899 முடிவிலே மாணவரது எண்ணிக்கை 328. இவ்விரு ஆண்டுகளிலும் மாணவர்களிடமிருந்து சேகரித்த பணம் ரூபா 5432 சதம் 28 ½ , அரசாங்க நன்கொடை ரூபா 2764 சதம் 50. ஆசிரியர்களுக்குக் கொடுத்த சம்பளமும் ஏனைய சில்லறைச் செலவுகளும் ரூபா 9852 சதம் 40. ஆக இவ்விரு வருடங்களிலும் ரூபா 1655 சதம் 61 ½ ஐ சைவபரிபாலன சபை கல்லூரியை நடத்தச் செலவு செய்தது.

1899 ஆம் ஆண்டு இறுதியில் கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்களின் எண்ணிக்கை பதினான்கு. இவர்களுள் மூவர் B.A பட்டதாரிகள். இக்கல்லூரியின் ஆரம்ப காலம் முதல் ஆசிரியராகப் பணியாற்றிய திரு. ச. பொன்னுத்துரை என்பவர் நொத்தாரிஸ் பரீட்சையில் தேறியதைத் தொடர்ந்து 1898 வைகாசி முதல் ஆசிரியப் பணியில் இருந்து விலகிக்கொண்டார். மூன்று வருடகாலம் ஆசிரியப் பணிபுரிந்த B.A தம்பி என்றழைக்கப்பட்ட திரு. வி. கதிரவேற்பிள்ளை பிறக்ரர் பரீட்சைக்குப் படிப்பதற்காக 1898 ஐப்பசி மாதத்திலிருந்து விலகிக்கொண்டார்.

### விடுதிச்சாலை

இந்துக் கல்லூரிக் கட்டடத்திற்குப் பக்கத்திலே நடந்து வந்த விடுதிச்சாலை சில காலமாக நடவாதிருந்தமையால் 1899 ஆம் ஆண்டு தை மாதம் 14 ஆம் திகதி முதல் பிரப்பங்குளத்தடியில் திரு. அ. மயில்வாகனம் என்பவரது வீட்டை வாடகைக்கு எடுத்து திரு. நா. பொன்னையா என்பவரை விடுதி மேற்பார்வையாளராக நியமித்து விடுதிச்சாலை நடத்தப்பட்டது.

கல்லூரி அதிபர் திரு. செல்லத்துரை விடுமுறை பெற்று சென்னைக்குச் சென்றார். அப்போ 1899 தை மாதம் முதல் திரு. J.K. நமசிவாய பிள்ளை, B.A. என்பவர் பதில் அதிபராகப் பணியாற்றினார். திரு. தா. செல்லப்பாபிள்ளை, திரு. S.K. லோட்டன், திரு.சித. மூ. பசுபதிச்செட்டியார் ஆகிய மூவரையும் சபை 1899 ஆம் ஆண்டுக்கான வருகை ஆசிரியர்களாக (Visitors) நியமித்தது. ஆசிரியராக இருந்து விலகிய திரு. வை. சங்கரப்பிள்ளையின் இடத்துக்கு 1899 ஆவணி மாதம் முதல் திரு. த.தம்பிப்பிள்ளை, திரு. இ.செல்லையா ஆகிய இருவரும் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர்.

❀ (வளரும்)

Edited & Published by Mr. S. Shivasaravanabavan on behalf of the Saiva Paripalana Sabai 450, K.K.S Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K.K.S Road, Jaffna. 15.05.2009 (1st Day of Vaikasi Thinkal). Phone: 021 222 7678